# உங்களுடைய இறையியலைக் கட்டுதல்

பாடம் 3

## வெளிப்பாட்டை சார்ந்திருத்தல்

Manuscript

thirdmill
Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்


முன்னுரை ........ 1

வெளிப்பாட்டை கண்டறிதல் ........ 2

**பொதுவான வெளிப்பாடு** ........ 2

ஊடகம் ........ 3

உள்ளடக்கம் ........ 5

**விசேஷித்த வெளிப்பாடு** ........ 7

**இடைத்தொடர்புகள்** ........ 10

ஒன்றன் மேல் ஒன்று ........ 11

தேவை ........ 15

வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ளுதல் ........ 19

**பாவத்தினால் உண்டாகும் தடை** ........ 19

பொதுவான வெளிப்பாடு ........ 20

விசேஷித்த வெளிப்பாடு ........ 22

**பரிசுத்த ஆவியின் ஒளியூட்டுதல்** ........ 24

விசேஷித்த வெளிப்பாடு ........ 25

பொதுவான வெளிப்பாடு ........ 28

**முடிவுகள்** ........ 30

நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுதல் ........ 35

**சமமான தரம்** ........ 36

**மரியாதை செயல்முறை** ........ 39

வேதாகமத்தின் ஒற்றுமை ........ 41

சமூகத்தில் தொடர்பு ........ 42

கிறிஸ்தவ வாழ்க்கை ........ 44

**பொருத்தமான சீரமைப்பு** ........ 45

முடிவுரை ........ 48

# முன்னுரை

யாருக்காவது ஒரு பரிசைக் கொடுத்து விட்டு அதை அவர்கள் உபயோகிக்கவில்லை என்று அறிந்திருக்கிறீர்களா? ஒருமுறை ஒரு ஓவியர் தனது நண்பருக்கு அழகான ஓவியம் ஒன்றைக் கொடுத்தார். அவரது நண்பர் அந்த நேரத்தில் அதிக வேலையுள்ளவராக இருந்தார், எனவே அவர் அதை எங்கு வைக்க வேண்டும் என்று முடிவு செய்யும் வரை அதை ஒரு அலமாரியில் மாட்டி வைத்தார். சுமார் ஒரு வருடம் கழித்து, அந்த கலைஞர் மீண்டும் தனது நண்பரை சந்தித்தார். சுற்றிப் பார்த்து அந்த ஓவியத்தைப் பற்றிக் கேட்டார், ஆனால் அவரின் நண்பர் அதற்குள் அதைப்பற்றி மறந்துவிட்டார். என்ன நடந்தது என்பதை விளக்க முயன்றாலும் அவரது நண்பர் அதைப்பற்றி மிகவும் கஷ்டமாக உணர்ந்தார். ஆனால் அவர் என்ன சொன்னாலும், கலைஞர் அந்த பரிசு இவருக்கு பிடிக்கவில்லை என்றே கருதினார்.

நமது கிறிஸ்தவ இறையியலை நாம் கட்டமைக்கும்போது இது போன்ற ஒன்று உண்மையாக இருக்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக, எண்ணற்ற வழிகளில், தேவன் நமக்கு வெளிப்படுத்தும் வரத்தைக் கொடுத்திருக்கிறார் என்று விசுவாசிக்கிறோம். ஆனால் அவருடைய வரத்தை நாம் எவ்வளவு மதிக்கிறோம் என்பதை நம் வாழ்வில் உண்மையில் எவ்வளவு பயன்படுத்துகிறோம் என்று காட்டுவதில்தான் இருக்கிறது. தேவனுடைய வெளிப்பாட்டின் மீது நாம் விசுவாசம் வைக்கத் தவறும்போது, அது நமக்கு எவ்வளவு சிறிய விஷயமாக இருக்கிறது என்று நாம் நிரூபிக்கிறோம், மேலும் அந்த வரம் இல்லாமல் நமது இறையியலை கட்டியமைக்க முட்டாள்தனமாக முயற்சி செய்கிறோம்.

*உங்களுடைய இறையியலைக் கட்டுதல்* என்ற நமது தொடரில் வரும் மூன்றாவது பாடத்திற்கு, நாம் ”வெளிப்பாட்டை சார்ந்து கொள்ளுதல்” என்று தலைப்பிட்டுள்ளோம். இந்தப் பாடத்தில், நமது இறையியலை மேம்படுத்தும்போது, தேவனின் வெளிப்பாட்டு வரத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை ஆராய்வோம்.

நம்முடைய பாடமானது மூன்று முக்கிய பகுதிகளாக பிரிக்கப்படும். முதலில், வெளிப்பாட்டைக் கண்டறிவது பற்றி வேதம் என்ன கற்பிக்கிறது என்பதை ஆராய்வோம். இரண்டாவதாக, தேவனின் வெளிப்பாட்டைப் புரிந்துகொள்வதில் உள்ள முக்கியமான சில செயல்பாட்டு முறைகளை நாம் ஆராய்வோம். மூன்றாவதாக, தேவனின் வெளிப்பாட்டிலிருந்து நாம் பெறும் இறையியல் முடிவுகளில் நம்பிக்கையை வளர்ப்பதற்கான வழிகளைக் கருத்தில் கொள்வோம். தேவனின் வெளிப்பாட்டை நாம் எங்கு காண்கிறோம் என்பதைப் பார்ப்பதன் மூலம் ஆரம்பிக்கலாம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# வெளிப்பாட்டை கண்டறிதல்

இறையியலாளர்கள் பெரும்பாலும் தேவனை ”மறைக்கப்பட்ட தேவன்” அல்லது இறையியல் அடிப்படையில் *”டியஸ் அப்ஸ்காண்டிடஸ்”* என்று பேசியுள்ளனர். தேவன் தன்னை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்றால், தேவன் நம்மிடமிருந்து முற்றிலும் மறைக்கப்பட்டிருப்பார். அனைத்து உண்மையான விசுவாசிகளும் தெய்வீக வெளிப்பாட்டிற்கான நமது தேவையை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால் இவை அனைத்தும் ஒரு முக்கியமான கேள்வியை எழுப்புகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள், இயேசு மற்றும் புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் இந்த சிக்கலைப்பற்றி ஒரே குரலில் பேசினர். சபை வரலாறு முழுவதும் உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் அதையே செய்திருக்கிறார்கள். மனித ஊகங்களின் அடிப்படையில் நம்பகமான இறையியலை நாம் உருவாக்க முடியாது. தெய்வீக வெளிப்பாட்டின் உறுதியான அடித்தளத்தின் மீது நாம் கட்டியெழுப்ப வேண்டும். இவை அனைத்தும் சேர்ந்து, தேவனுடைய வெளிப்பாட்டை நாம் எங்கே காணலாம்? என்கிற முக்கியமான கேள்வியை எழுப்புகின்றன.

வெளிப்பாட்டைக் கண்டறிவதற்கான விஷயத்தை நாம் ஆராயும்போது, மூன்று சிக்கல்களைப்பற்றி நாம் பேசுவோம். முதலில், பொதுவான வெளிப்பாட்டின் கோட்பாட்டைப் பார்ப்போம். இரண்டாவதாக, சிறப்பான வெளிப்பாட்டின் கோட்பாட்டைக் கருத்தில் கொள்வோம். மூன்றாவதாக, இந்த இரண்டு வெளிப்பாட்டு வடிவங்களுக்கிடையே இருக்கும் தொடர்புகளை நாம் ஆராய்வோம். பொதுவான வெளிப்பாட்டைப்பற்றி பேசி நாம் ஆரம்பிக்கலாம்.

## பொதுவான வெளிப்பாடு

நாம் அடிக்கடி ”பொதுவான வெளிப்பாடு” என்று அழைக்கும் வெளிப்பாடானது, தேவன் தன்னை மனிதகுலத்திற்கு வெளிப்படுத்திய முக்கிய வழிகளில் ஒன்றாகும். பொதுவாக சிருஷ்டிக்கப்பட்டவைகளின் மூலமாகவும், பொதுவாக எல்லா மக்களுக்கும், தேவன் தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதைக் குறிக்க “பொதுவான” என்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம். இந்த வெளிப்பாடானது சில நேரங்களில் ”இயற்கையான வெளிப்பாடு” என்று சொல்லப்படுகிறது, ஏனெனில் இந்த வெளிப்பாடு இயற்கை அல்லது சிருஷ்டிப்பின் மூலம் வருகிறது.

பொதுவான வெளிப்பாட்டைப் பற்றி பல வேதாகமப் பகுதிகள் நமக்குக் கற்பிக்கின்றன. உதாரணமாக, சங்கீதம் 19:1-6, அப்போஸ்தலருடைய நடபடிகள் 14:15-17; மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 17:26, 27 -ல் குறிப்பிடப்பட்டுள்ள கருத்தை நாம் காண்கிறோம். ஆனால் வேதாகமத்தில் உள்ள பொதுவான

வெளிப்பாட்டின் முழுமையான விளக்கம் ரோமர் 1:18-32 இல் நமக்கு தெரிந்த வசனங்களில் இருக்கிறது.

> பொதுவான வெளிப்பாடு என்பது தேவன் தம்மைப் பற்றி நமக்கு வெளிப்படுத்துவது அல்லது சிருஷ்டிப்பின் மூலம் தம்மைப் பற்றி நமக்குச் சொல்லுவதாக இருக்கிறது, அதாவது இயற்கையின் மூலம் மற்றும் வரலாற்றின் மூலம் இந்த வெளிப்பாடு நமக்கு கிடைக்கிறது. இது வெளிப்படுத்தலானதாகும்; உதாரணமாக, சங்கீதம் 19-ல் நாம் காணும் தேவனைப் பற்றி அது நமக்குச் சொல்கிறது: "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது." எனவே, வானங்கள், வானத்தில் உள்ளவைகள், பூமி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் பலவற்றைச் சிந்தித்துப் பார்த்தால், மகிமையுள்ள ஒரு சிருஷ்டி கர்த்தர் இருக்கிறார் என்பது நம்முடைய சிந்தனையில் வரும். மேலும், ரோமர் 1ல், பவுல், தேவனைப் பற்றியும், சிருஷ்டிப்பில் நாம் உணர்ந்தவற்றின் மூலம் அவருடைய வல்லமை மற்றும் அவருடைய ஞானத்தைப் பற்றியும் தெரிந்துகொள்ள முடியும் என்று பேசுகிறார்.
>
> – Dr. லாரி ட்ரோட்டர்

பொதுவான வெளிப்பாட்டின் இந்த வேதாகமப் போதனையைப் பார்க்க, பொதுவான வெளிப்பாட்டின் கருவி அல்லது வழித்தடமான ஊடகம் மற்றும் பொதுவான வெளிப்பாட்டின் உள்ளடக்கம் ஆகிய இரண்டு விஷயங்களையும் நாம் பார்க்க வேண்டும். முதலாவதாக, பொதுவான வெளிப்பாட்டின் ஊடகம் அனைத்தும் சிருஷ்டிப்பிலிருக்கிறது என்று வேதம் கற்பிக்கிறது.

## ஊடகம்

எபேசியர் 1:18-20 இல் பவுல் இந்த விஷயத்தை வைத்த விதத்தை கவனியுங்கள்:

> தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.... தேவன் அதை [மனிதர்களுக்கு] ... உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே காட்டினார் (ரோமர் 1:18-20).

இந்த வார்த்தைகள், தேவன் சிருஷ்டிப்பின் மூலம் அல்லது இங்கே கூறுவது போல், "உண்டாக்கப்பட்ட பொருட்களில்" தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார் என்று நமக்குச் சொல்கிறது.

வெளிப்பாடானது விண்வெளியில் உள்ள மாபெரும் விண்மீன் திரள் கூட்டம் மற்றும் பொருளின் நுண்ணிய அலகுகள் மூலம் வருகிறது. சிருஷ்டிப்பின் தோற்றம், எளிதில் அறியமுடியாத மற்றும் ஆவிக்குரிய பரிமாணங்கள் மட்டுமல்லாமல், மனிதர்களாகிய நாம் உயிருடன் இருப்பது கூட, சிருஷ்டிப்பில் உள்ள அனைத்தும் தேவனின் வெளிப்பாட்டிற்கு மத்தியஸ்தம் செய்கின்றன. துரதிர்ஷ்டவசமாக, ரோமர் 1 இல் உள்ள வார்த்தைகள் அதன் இயல்பான நிலையில் சிருஷ்டிப்பை மட்டுமே குறிக்கின்றன என்று கிறிஸ்தவர்கள் அடிக்கடி கருதுகின்றார்கள். காடுகள், ஏரிகள், மலைகள் மற்றும் வனப்பகுதிகள் எவ்வாறு நம்முடைய எண்ணங்களை தேவனுக்கு நேராக திருப்பும் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனால், நாகரீகம், தொழில்நுட்பம், மனித கலாச்சாரம் ஆகியவை தேவனை வெளிப்படுத்துகின்றன என்பதை நாம் அடிக்கடி உணரத் தவறுகிறோம்.

> வேத வசனத்தில், தேவன் நமக்குச் சொல்லுவதும், பவுல் ரோமர் 1ல் நமக்கு தரும் வாதமும் என்னவென்றால், ஒருவர் யார் என்பதோ அல்லது எந்த கலாச்சாரத்தை சேர்ந்தவர் என்பதோ முக்கியமல்ல, இதுவரை வாழ்ந்துகொண்டிருக்கிற ஒவ்வொரு மனிதனும் தேவன் இருக்கிறார் என்பதை அறிந்திருப்பதே முக்கியம்... மனசாட்சி மூலம் தேவன் இருக்கிறார் என்பதை ஒவ்வொரு மனிதனாலும் அறியமுடியும் என்று பவுல் கூறினார். மனிதன் காரணம் உடையவனாகவும், மனசாட்சி உடையவனாகவும், உலகில் சிருஷ்டிக்கப்பட்டதனால் அதன் மூலம் தேவனின் தெய்வீக இயல்பைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். எனவே, சிருஷ்டிப்பு மற்றும் மனசாட்சியின் மூலம் தேவன் இருக்கிறார் என்பதை எல்லா மனிதர்களும் அறிவார்கள். நீங்கள் ரோமர் 1ஐப் பார்த்தால், தேவனின் நீதியான சுபாவமும் அவருடைய பரிசுத்தமும் மனிதர்களின் எல்லா தேவபக்திக்கு எதிராகவும் பரலோகத்திலிருந்து வெளிப்பட்டதாகவும், மனிதர்கள் அதை மறுத்ததாகவும் அது சொல்லுகிறது. அவர்கள் தங்கள் அநியாயத்தில் தேவனின் சத்தியத்தை அடக்கினார்கள்.
>
> – Rev. கிளீட் ஹக்ஸ்

ரோமர் 1:32 இல் நாம் அதைத்தான் வாசிக்கிறோம்:

> இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள் (ரோமர் 1:32).

இயற்கையானது சிருஷ்டிக்கப்பட்டதன் இயல்பான நிலையின் மூலம் அல்ல, மாறாக, மக்கள் அந்த இயற்கையை வைத்து என்ன செய்கிறார்கள் என்பதன் மூலம் பொதுவான வெளிப்பாடு வருகிறது என்பதை இந்த வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன. மனித தொழில்நுட்பங்கள், அறிவியல், கட்டிடக்கலை, அரசியல், குடும்ப வாழ்க்கை, கலை, மருத்துவம், இசை மற்றும் மனித கலாச்சாரத்தின் எண்ணற்ற தயாரிப்புகளும் தேவனின் வெளிப்பாட்டிற்கு உதவுகின்றன. நாம் தேவனின் வெளிப்படுத்தலிலிருந்து தப்பிக்க முடியாது.

பொதுவான வெளிப்பாட்டின் ஊடகத்துடன் சேர்த்து, ரோமர் 1 இல் பவுல் பொதுவான வெளிப்பாட்டின் அடிப்படை உள்ளடக்கத்தையும் சுட்டிக்காட்டினார் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

## உள்ளடக்கம்

இப்போது, ஒரு கண்ணோட்டத்தில், பொதுவான வெளிப்பாட்டின் மூலம் மக்கள் அறிந்துகொள்வது என்ன என்பதைப் பற்றி பவுல் மிகவும் துல்லியமாக சொல்லவில்லை. பொதுவான வெளிப்பாட்டைப் பற்றி வெவ்வேறு இடங்களில் நேரங்களில் வெவ்வேறு நபர்கள் வெவ்வேறு அம்சங்களைச் சந்தித்து ஒப்புக்கொள்வதன் காரணமாக அவர் குறிப்பிட்ட குறை அநேகமாக வந்திருக்கலாம். இருப்பினும் பொதுவான வெளிப்பாடு குறைந்தபட்சம் மனிதர்களுக்கு இரண்டு வகையான தகவல்களான தேவனின் பண்புகள் மற்றும் நம்முடன் தொடர்புடைய தார்மீக பொறுப்புகளை வெளிப்படுத்துகிறது என்று பவுல் தெளிவுபடுத்தினார்.

ஒருபுறம், ரோமர் 1:20 இல் பவுல் கூறியது போல், சிருஷ்டிப்பு வெளிப்படுத்துகிறது:

> [தேவனின்] காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள் (ரோமர் 1:20).

நேரடியாகப் பார்க்க முடியாத தேவனின் குணாதிசயங்கள் அவருடைய சிருஷ்டிப்பில் மறைமுகமாகக் காணப்படுகின்றன என்பதை இங்கே பவுல் தெளிவுபடுத்தினார். ஒவ்வொரு நபரும், அவர்கள் யாராக இருந்தாலும், தேவனின் குணாதிசயத்தின் சில பரிமாணங்களை அறிந்திருக்கிறார்கள், ஏனென்றால் ரோமர் 1:19 இல் நாம் முன்பு படித்தது போல, “தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.” உதாரணமாக, சிருஷ்டிப்பின் அழகு தேவனின் பிரமிக்க வைக்கும் அழகைச் சுட்டிக்காட்டுகிறது. மனிதனின் வாழ்க்கைக்கான இயற்கையின் கொடையானது தேவனின் நற்குணத்தை நிரூபிக்கிறது. சிருஷ்டிப்பின் அளவு மட்டுமே அவரது மகத்துவத்தை



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெளிப்படுத்துகிறது. சிருஷ்டிப்பின் சிக்கலான தன்மை அவருடைய ஒப்பற்ற ஞானத்தைக் காட்டுகிறது. மேலும் இயற்கையின் வல்லமையானது அவருடைய தெய்வீக வல்லமையை வெளிப்படுத்துகிறது.

> நாம் மனித உடலைப் பார்த்தால், அது பொதுவான வெளிப்பாட்டின் ஒரு பகுதியாக இருக்கிறது. தேவன் நமக்கு புரிந்துகொள்ள மிகவும் சிக்கலான உடலைக் கொடுத்தார். இது நேர்த்தியானது மற்றும் அற்புதமானது. உதாரணமாக, விஞ்ஞானிகள் மனித உடலில் உள்ள உயிரணுக்களின் எண்ணிக்கை முப்பத்தேழு டிரில்லியன் என மதிப்பிடுகின்றனர். முப்பத்தேழு டிரில்லியன்! மேலும் ஒவ்வொரு உயிரணுவும் புரிந்துகொள்வதற்கு சிக்கலானது மற்றும் ஒரு குறிப்பிட்ட அமைப்பு மற்றும் செயல்பாட்டைக் கொண்டுள்ளது… நம்மைச் சுற்றியுள்ள இடத்தைப் பற்றி யோசித்தால், அற்புதமான விஷயங்களைப் பார்க்க முடியும். நமக்கு சூரிய குடும்பம் உள்ளது, மேலும் பூமியானது சூரியனைச் சுற்றி வரும் கிரகங்களில் ஒன்றாகும், இதை நாம் சூரிய குடும்பம் என்று அழைக்கிறோம்… நமது விண்மீன் மண்டலத்தில் உள்ள எண்ணற்ற சூரிய குடும்பங்களுக்குள் நாம் ஒரே ஒரு சூரிய குடும்பத்தில் இருக்கிறோம். இதையெல்லாம் விட வியப்பான விஷயம் என்னவென்றால், பல நூறு கோடி விண்மீன் திரள்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் மதிப்பிடுகிறார்கள்! இவை அனைத்தும் ஏன் இருக்கின்றன? இதையெல்லாம் செய்தது யார்? இவை அனைத்தும் தானாக வந்தது என்று சொல்லுவது நியாயமானதா? அல்லது ஆதியும் அந்தமும் இல்லாத, மகத்துவமும் வல்லமையும் நிறைந்த ஒரு ஞானியும், பெரிய தேவனும் இவைகளை சிருஷ்டித்தாரா? என்பது தான் கேள்வியாகும்.
>
> – Rev. Dr. எமாட் ஏ.மிக்கேல், மொழிபெயர்ப்பு

மறுபுறம், தேவனின் கண்ணுக்குத் தெரியாத பண்புகளைக் காட்டுவதுடன், பொதுவான வெளிப்பாடு தேவனுக்கு முன்பாக நமக்கு இருக்கவேண்டிய தார்மீக பொறுப்புகளின் அம்சங்களைத் தெரிவிக்கிறது. மனித இனத்தின் பாவத்தைப் பற்றி பேசிய ரோமர் 1:32 இல் பவுல் சொல்வதை மீண்டும் கேளுங்கள்.

> இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத்

> தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாயிருக்கிறார்கள் (ரோமர் 1:32).

வேறு வார்த்தைகளில் கூறுவதானால், படைப்பின் பல்வேறு அம்சங்கள் தேவனுக்கு முன்பாக நாம் கொண்டிருக்கும் தார்மீக பொறுப்புகளை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, ஆண் மற்றும் பெண் இடையே உள்ள உயிரியல் வேறுபாடுகள் எதிர்-பால் சேர்க்கையை கடைப்பிடிக்க வேண்டிய கடமையை வெளிக்காட்டுகின்றன. பெற்றோரின் பராமரிப்பில் குழந்தைகள் சார்ந்திருப்பது, தங்கள் குழந்தைகளைப் பராமரிக்கும் பெற்றோரின் கடமையையும், பெற்றோரை மதிக்க வேண்டிய குழந்தைகளின் பொறுப்பையும் வெளிப்படுத்துகிறது. பஞ்சத்திலும், போரிலும் மனிதர்கள் படும் துன்பம், கருணை காட்ட வேண்டிய நமது கடமையை வெளிப்படுத்துகிறது. நாம் எங்கு பார்த்தாலும், சிருஷ்டிப்பு நம்மை அழைத்து, படைப்பிலும் அதன் மூலமாகவும் தேவன் வெளிப்படுத்தும் தார்மீக தரங்களுக்கு நம் வாழ்க்கையை இணங்குமாறு உறுதிபட சொல்லுகிறது.

பொதுவான வெளிப்பாட்டின் கோட்பாட்டைப் பற்றி சிறிது படிப்பதன் மூலம் எப்படி வெளிப்பாட்டைக் கண்டுபிடிப்பது என்பதை இப்போது நாம் ஆராய்ந்தோம், நாம் விசேஷமான வெளிப்பாட்டு கோட்பாட்டிற்கு நேராக நமது சிந்தனையை திருப்புவோம்.

## விசேஷித்த வெளிப்பாடு

பாரம்பரிய கிறிஸ்தவ இறையியலில், தேவன் எல்லா மக்களுக்கும் தன்னை வெளிப்படுத்திய விதமாகிய பொதுவான வெளிப்பாடு மற்றும் விசேஷமான வெளிப்பாடு ஆகியவற்றை வேறுபடுத்துவது வழக்கமானதாகும். இந்த வேறுபாடு பல வழிகளில் பயனுள்ளதாக இருக்கும், ஆனால் நாம் கவனமாக இருக்க வேண்டும். சுவிசேஷ புராட்டஸ்டன்ட்டுகள் விசேஷமான வெளிப்பாட்டைப் பற்றி பேசும்போது, அவர்கள் பெரும்பாலும் வேதவசனங்களைப் பற்றி மட்டுமே நினைக்கிறார்கள். நிச்சயமாக, வேதமானது தேவனின் விசேஷமான வெளிப்பாட்டின் ஒரு முக்கிய பரிமாணமாகும், ஆனால் விசேஷமான வெளிப்பாடானது வேதாகமத்தை விட அதிகமானவற்றை உள்ளடக்கியது.

விசேஷமான வெளிப்பாடு ”விசேஷம்” என்று அழைக்கப்படுகிறது, ஏனெனில் இது எல்லா இடங்களிலும் உள்ள அனைத்து மக்களுக்கும் வழங்கப்படவில்லை, ஆனால் இது மனிதகுலத்தின் குறிப்பிட்ட அல்லது விசேஷமான பிரிவுகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. இந்த வகையான வெளிப்பாடு வரலாறு முழுவதும் பல வடிவங்களை எடுத்துள்ளது, ஆனால் கிறிஸ்தவத்தின் பார்வையில் பார்க்கும்போது, தேவன் தம் குமாரனாகிய இயேசுவில் தன்னை மிகத் தெளிவாகவும் முழுமையாகவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வெளிப்படுத்தினார் என்கிறார்கள். எபிரேயர் 1:1-3, விசேஷமான வெளிப்பாடு பற்றிய கிறிஸ்தவக் கண்ணோட்டத்தின் குறுகிய சுருக்கத்தை கொடுக்கிறது:

> பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய் இருக்கிறார் (எபிரேயர் 1:1-3).

கிறிஸ்துவின் வருகைக்கு முன், தேவன் பல விசேஷமான வழிகளில் தம்மையும் அவருடைய சித்தத்தையும் வெளிப்படுத்தினார். அவர் மக்களிடம் நேரடியாகப் பேசினார், அவர்களுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட சொப்பனங்களைக் கொடுத்தார், தரிசனங்களுக்கு அவர்களின் கண்களைத் திறந்தார், தீர்க்கதரிசிகள், ஆசாரியர்கள், ராஜாக்கள் மற்றும் ஞானிகள் மூலம் பேசினார். ஆனால் இந்த வெளிப்பாடுகள் எதுவும் தேவனின் குமாரனாகிய கிறிஸ்துவின் முழுமையான மற்றும் மிக உயர்ந்த மகிமையான வெளிப்பாட்டுடன் ஒப்பிடப்படவில்லை. இயேசுவின் வாழ்க்கையும் போதனைகளும் தேவனின் முதன்மையான விசேஷமான வெளிப்பாடாக இருக்கிறது. இந்த காரணத்திற்காக, அது மிகவும் கிறிஸ்தவ இறையியலுக்கான தரநிலை கிறிஸ்துவில் தேவனின் வெளிப்பாடு என்று சொல்வது பொருத்தமானதாக இருக்கிறது. இப்போது, தேவனின் உச்ச வெளிப்பாடாக கிறிஸ்துவுக்கான இந்த அர்ப்பணிப்பு பல முக்கியமான விஷயங்களுக்கு வழிவகுக்கிறது. ஆனால் நமது நோக்கங்களுக்காக, தேவனின் வெளிப்பாடாக நாம் வேத வசனத்திற்கு அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டும் என்பது நம்முடைய மிக முக்கியமான மற்றும் நடைமுறை உட்குறிப்புகளில் ஒன்றாக இருக்கவேண்டும்.

> நாம் ஏன் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் தேவனின் வெளிப்பாடாக நினைத்து அதற்கு அடிபணிய வேண்டும் என்று நினைக்கும்போது, இயேசு கிறிஸ்து அவைகளை எப்படி கையாண்டார் என்பதை நாம் சிந்திக்கலாம். இயேசு வேத வசனத்தை வாசித்தபோது, அவருடைய அதிகாரம் எங்கிருந்து வருகிறது? அவர் பிதாவிடமிருந்து வந்தவர் என்று கூறினார், ஆனால் அவர் பிதாவினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தைப் பற்றி அடிக்கடி குறிப்பிடும்போது, அவருடைய வார்த்தைகள் பழைய

> ஏற்பாட்டின் அடிப்படையில்தான் இருந்தன. அதாவது, இயேசு படித்த வேதாகமானது பழைய ஏற்பாட்டின் முழுமையாக இருக்கிறது; பழைய ஏற்பாடு அவருடைய நியதியாகும். பின்னர், அவர் நமக்கு அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் கொடுத்தார் என்றும் சொன்னார். எபேசியர் 2, 4 மீண்டும் மீண்டும் வலியுறுத்துவது போல, இயேசு கிறிஸ்து மூலைக்கல்லாக இருக்கிறார், அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் சபையின் அடித்தளமாக இருக்கிறார்கள். நமக்கு, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் ஒன்றாக நாம் பெற்ற வெளிப்பாடு ஆகும்.
>
> – Dr. பியாவோ சென், மொழிபெயர்ப்பு

கிறிஸ்துவை தேவனின் உன்னத வெளிப்பாடாகக் கருதுபவர்கள், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை இன்று அவருடைய மக்களுக்கு தேவன் கொடுத்த விசேஷமான வெளிப்பாடாகப் பெற்று அவருடைய முன்மாதிரியைப் பின்பற்றி, அவருடைய போதனைகளுக்கு அடிபணிய வேண்டும்.

> வேதாகமத்தை மனதில் இருந்து, அதாவது, தேவனின் இருதயத்தில் இருந்து வந்ததாக நாம் நேசிப்பது இன்றியமையாதது. தேவன் கிறிஸ்துவில் நம் பரலோகப் பிதாவாக இருக்கிறார், அவர் நம்மிடம் பேசுகிறார். வேதம் நம்மிடம் பேசும்போது, அவர் சொல்வதை நாம் நேசிக்க வேண்டும். மேலும், அநேகமாக, 119-ஆம் சங்கீதம் போல் வேதத்தின் மீதான இந்த அன்பை வெளிப்படுத்தும் எந்தப் பகுதியும் வேதவசனத்தில் இல்லை. சங்கீதக்காரன் மீண்டும் மீண்டும் இவ்வாறு கூறுகிறார், ”நான் உமது பிரமாணங்களை மிகவும் நேசிக்கிறேன், இரவும் பகலும் அவைகளை தியானிக்கிறேன். உம்முடைய வார்த்தைகளை புசிக்கிறேன்; நான் அவைகளை சிந்திக்கிறேன்; அவைகளே என் உணவு.” தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் 176 சந்தோஷப்படுத்தும் வசனங்களில் ஒவ்வொரு வசனத்திலும் அவர் சந்தோ**ஷ**ப்படுகிறார், அதாவது, 176 வசனங்கள் தேவனின் பிரமாணங்களில் மகிழ்ச்சி அடைகிறார். ஒரு புதிய ஏற்பாட்டு விசுவாசியாக, தேவனின் முழு ஆலோசனையிலும் நான் எவ்வளவு அதிகமாக மகிழ்ச்சியடைய வேண்டும் என்று எனக்குள் நினைத்துக்கொள்கிறேன்? “சிறந்த வாக்குத்தத்தங்கள்” நமக்கு உண்டு என்று எபிரெயர் புத்தகம் நமக்குச் சொல்கிறது. கிறிஸ்துவுடைய ஜீவனின் நிறைவை நாம் பெற்றுள்ளோம், அதனால் 119 ஆம் சங்கீதத்தின்

> எழுத்தாளர் நேசித்ததையும், இன்னும் பலவற்றையும் என்னால் நேசிக்க முடியும்.
>
> – Dr. ஆண்ட்ரூ டேவிஸ்

நம் நாளில், தேவனின் வெளிப்பாட்டைக் கண்டறிவதானது சிருஷ்டிப்பில் வெளிப்பட்டிருக்கும் பொதுவான வெளிப்பாடு மற்றும் வேதாகமத்தில் உள்ள விசேஷமான வெளிப்பாடு ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இப்போது, இந்தக் கோட்பாடுகளுக்கு இடையே உள்ள தொடர்புகளுக்கு நேராக நம் கவனத்தைத் திருப்புவோம். இந்த ஒன்றோடொன்று இருக்கும் தொடர்புகளைப் புரிந்துகொள்ள உதவும் வெளிப்பாட்டின் எந்த வடிவத்தையும் நாம் புறக்கணிக்க முடியாது.

## இடைத்தொடர்புகள்

கிறிஸ்தவ இறையியலைக் கட்டியெழுப்பும்போது நாம் கடைசியாகச் செய்ய விரும்புவது என்னவென்றால், தேவன் பொதுவான அல்லது விசேஷமான வெளிப்பாட்டில் வெளிப்படுத்திய எதையும் புறக்கணிப்பதைப் பற்றியதாகும். இயேசு தனது உவமைகளில் பொதுவான வெளிப்பாட்டின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டினார், மேலும் ஒவ்வொரு முறையும் அவரது போதனையில், அவர் பொதுவான வாழ்க்கை அனுபவங்களிலிருந்து எடுத்து போதித்தார். அவர் வேதவசனங்களைக் குறிப்பிடும் ஒவ்வொரு முறையும் விசேஷமான வெளிப்பாட்டின் முக்கியத்துவத்தையும் அவர் சுட்டிக்காட்டினார். ஆனால் நீங்களும் நானும் இயேசுவைப் போலவே இந்த இரண்டு வெளிப்பாடுகளையும் நம்புவதற்கு, அவை எவ்வாறு ஆழமாக ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பொதுவான வெளிப்பாட்டைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, வேதத்தின் விசேஷமான வெளிப்பாடு அதை பிரதிபலிக்க நமக்கு வழிகாட்டுகிறது. மேலும் வேதாகமத்தில் தேவனின் விசேஷமான வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ள பொதுவான வெளிப்பாடு நமக்கு உதவுகிறது. வழியில் ஒவ்வொரு அடியிலும், இந்த இரண்டும் கைகோர்த்து செல்கின்றன.

பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடுகளுக்கு இடையே உள்ள ஒன்றுடன் ஒன்று இருக்கும் தன்மை மற்றும் இரண்டு வகையான வெளிப்பாடுகளின் தேவை ஆகிய இந்த வகையான வெளிப்பாடுகளுக்கு இடையிலான தொடர்புகளின் இரண்டு அம்சங்களை நாம் பார்ப்போம். பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடுகளுக்கு இடையே உள்ள ஒன்றுடன் ஒன்று இருக்கும் தொடர்பை முதலில் பார்ப்போம்.

## ஒன்றன் மேல் ஒன்று

தனித்தனி தலைப்புகளின் கீழ், நாம் அடிக்கடி, பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடுகளைப் பற்றி பேசினாலும், இந்த இரண்டு வகையான வெளிப்பாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் ஒன்றன் மேல் ஒன்று இருப்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். இதைக் காண, இரண்டு வகையான வெளிப்பாட்டிலும் காணப்படும் பல்வேறு உள்ளடக்கத்தை நாம் ஒப்புக்கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

ஒருபுறம், வேதவசனங்களில் உள்ள விசேஷமான வெளிப்பாடானது, அசாதாரண நுண்ணறிவுகளுக்கும் மிகவும் பொதுவான நுண்ணறிவுகளுக்கும் இடையே ஒரு தொடர்ச்சியை உருவாக்கும் பல விஷயங்களை விளக்குகிறது. வேதாகமத்தில் சில பகுதிகள் மிகவும் அசாதாரணமானவை, தெய்வீக வழிகாட்டுதலுடன் கூட சாதாரண கருத்தூன்றல் அல்லது அனுபவங்கள் மூலம் யாரும் அவற்றை எழுதியிருக்க முடியாது. வேதாகமத்தின் இந்தப் பகுதிகள் அசாதாரணமான, இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளில் கொடுக்கப்பட்டுள்ளன. வேதாகமத்தில் உள்ள இந்த வகையான விஷயங்களின் மிகத் தெளிவான எடுத்துக்காட்டுகள் தானியேல், யோவேல் மற்றும் வெளிப்படுத்துதல் போன்ற புத்தகங்களின் பகுதிகளாக இருக்கலாம். இவைகளை எழுதியவர்கள் தரிசனங்கள் மூலமாகவும் மற்றும் குறிப்பாக அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பிற இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிமுறைகள் மூலம் தங்கள் தகவல்களைப் பெற்றனர். இந்த அர்த்தத்தில், வேதாகமத்தின் இந்தப் பகுதிகளை நாம் ”மிக விசேஷமான வெளிப்பாடு” என்று அழைக்கலாம்.

இந்த தொடர்ச்சியில், ஒரு வகையான நடுநிலையானது வேதத்தில் காணப்படுகிறது, அங்கு சாதாரண வழிமுறைகள் மூலம் ஆவியானவரால் வழங்கப்பட்ட ஆழ்ந்த அல்லது அசாதாரண நுண்ணறிவு மற்றும் நுண்ணறிவுகளின் கலவையான கூறுகளை நம்மால் பார்க்க முடியும். உதாரணமாக, ராஜாக்கள் மற்றும் லூக்கா சுவிசேஷ புத்தகங்களை வேதத்திலிருந்து எடுத்துக் கொள்ளுங்கள். இந்த புத்தகங்களை எழுதியவர்கள், சாதாரண மனித ஆதாரங்களில் இருந்து தங்களின் பெரும்பாலான தரவுகளை சேகரித்ததாக வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளனர். ராஜாக்கள் புத்தகம் இஸ்ரவேல் மற்றும் யூதாவின் ராஜ காரியங்களை குறிக்கிறது. லூக்கா கிறிஸ்துவின் வாழ்க்கையை நேரில் கண்ட சாட்சிகளிடமிருந்து தனது தகவல்களை சேகரித்ததாக குறிப்பிடுகிறார். இந்த வேதாகம எழுத்தாளர்களை தேவனின் ஆவியானவர் வழிநடத்தியதால், விசேஷமான இயற்கைக்கு அப்பாற்பட்ட நுண்ணறிவுகள் நிச்சயமாக சேர்க்கப்பட்டுள்ளன. அவர்கள் தங்கள் ஆதாரங்களில் கண்டறிந்த தகவல்களின் துல்லியம் பற்றிய நுண்ணறிவு, அவற்றின் ஆதாரங்களை எவ்வாறு விளக்குவது என்பது பற்றிய நுண்ணறிவு மற்றும் சாதாரண வழிமுறைகள் மூலம் கண்டுபிடிக்கப்படாத தகவல்களின் நுண்ணறிவு போன்றவைகள் இருக்கின்றன. எனவே, இந்த

அர்த்தத்தில், வேதாகமத்தின் இந்த பகுதிகள் சிலர் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடியவைகளையும் சாதாரணமானவற்றையும் கலக்கின்றன.

இதற்கு அப்பால், வேதாகமத்தின் பெரிய பகுதிகள் பொதுவான ஆனால் ஈர்க்கப்பட்ட நுண்ணறிவுகளைக் கொண்டிருக்கின்றன. ஏனென்றால், பரிசுத்த ஆவியானவர் வேதாகம ஆசிரியர்களை சாதாரண அனுபவங்களைப் பற்றிய சரியான கருத்தூன்றலை மேற்கொள்ள வழிகாட்டினார். உதாரணமாக, நீதிமொழிகள் 30:25-ல் நாம் வாசிக்கிறோம்:

> அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்கள் ஆகாரத்தைச் சம்பாதிக்கிற எறும்பு (நீதிமொழிகள் 30:25).

இந்த அறிக்கையானது ஏவப்பட்டதாகவும் உண்மையானதாகவும் இருக்கிறது, ஆனால் இது சிலர் மட்டுமே புரிந்துகொள்ளும் விதத்தில் பார்ப்பதாக இல்லாமல், இயற்கையை கருத்தூன்ற பார்ப்பதின் விளைவாக வந்து இருக்கிறது.

எனவே, இந்த அர்த்தத்தில், விசேஷமான வெளிப்பாடு என்பது நாம் பொதுவாக பொது வெளிப்பாட்டுடன் தொடர்புபடுத்தும் பொருட்களைக் கொண்டுள்ளது. உலகத்தைப் பற்றி நடைமுறையில் எவரும் கவனிக்கக்கூடிய விஷயங்கள் இவைகளே. வேதாகமத்தின் இந்தப் பகுதிகளை "பொதுவாக்கப்பட்ட விசேஷமான வெளிப்பாடு" என்று கூட நாம் கூறலாம்.

> நீதிமொழிகள் 14:20 இல், "தரித்திரன் தனக்கடுத்தவனாலும் பகைக்கப்படுகிறான்; ஐசுவரியவானுக்கோ அநேக சிநேகிதருண்டு" என்று சொல்லப்பட்டுள்ளது. இது நேர்மறை அல்லது எதிர்மறையான மதிப்பீட்டை உருவாக்குவது அவசியமில்லை, இங்கு கருத்தூன்ற பார்க்கும் திறனும், அங்கு என்ன நடந்தது என்பதைப் புரிந்து கொள்ள முடியும் தன்மையும் இருக்கிறது... இது உறவுகளாக இருந்தாலும் சரி, அதிகாரத்துடன் செயல்படும் விதமாக இருந்தாலும் சரி, எல்லா நேரத்திலும் நாம் விஷயங்களைக் கையாள்வதாக இருந்தாலும், நாம் பணத்தைப் பயன்படுத்துவதைப் பற்றிச் சிந்திப்பதாக இருந்தாலும், நம் பெற்றோருடனான உறவைப் பற்றிச் சிந்திப்பதாக இருந்தாலும், நம் வேலையைப் பற்றிச் சிந்திப்பதாக இருந்தாலும், மற்றும் எப்படி நாகரிகமாக சாப்பிடவேண்டும் என்பதாகவோ, இதுபோன்ற எல்லாவிதமான நடைமுறைச் சிக்கல்களுக்கும் இது பொருந்தும். பின்னர், ஒரு பரந்த வழியில் பார்த்தால்... இந்த உலகத்தையும் வாழ்க்கையையும் புரிந்து கொண்டு நாம் திறமையாக வாழவும் இது உதவுகிறது. தவிர்க்க வேண்டிய

> ஆபத்துகள் என்ன என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழிகளை நாம் தெரிந்துகொள்கிறோம். நாம் உண்மையிலேயே திறமையுடன் வாழ்க்கையை வாழ விரும்பினால், கர்த்தருக்குப் பயந்து அதைச் செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள வேதாகமம் நமக்கு உதவத் தொடங்குகிறது.
>
> – Dr. எரிக் ஜே. டுலி

மறுபுறம், விசேஷமான வெளிப்பாட்டைப் போலவே, பொதுவான வெளிப்பாடும், பொதுவானது முதல் அசாதாரணமானது வரை வகைப்படுத்தக்கூடிய பல்வேறு வகையான உள்ளடக்கங்களை உள்ளடக்கியிருக்கிறது. இந்த தொடர்ச்சியின் ஒரு முனையில், பெரும்பாலானவர்களுக்குத் தெரிந்த விஷயங்கள், இல்லையென்றால், இதுவரை வாழ்ந்த மக்கள் போன்ற மிகவும் பொதுவான கூறுகளை பொதுவான வெளிப்பாடு கொண்டுள்ளது. உலகம் மகத்தானது, பரந்த வானத்தால் மூடப்பட்டுள்ளது என்பது அனைவருக்கும் தெரியும். மேலும் கிட்டத்தட்ட ஒவ்வொருவரும் எப்போது தங்கள் தார்மீக மனசாட்சியை அனுபவித்திருக்கிறார்கள் என்ற நேரங்களை நினைவில் வைத்திருக்க முடியும். ஏறக்குறைய ஒவ்வொருவரும் தங்கள் தார்மீக மனசாட்சியை அனுபவித்த நேரங்களை நினைவில் கொள்ள முடியும். இந்த உலகளாவிய அனுபவங்கள் எப்போதும் தேவனையும் மனிதகுலத்திற்கான அவருடைய விருப்பத்தையும் வெளிப்படுத்தியுள்ளன. நாம் அவற்றை ”மிகவும் பொதுவான வெளிப்பாடு” என்று சொல்லலாம்.

பொதுவான வெளிப்பாட்டின் வரம்பின் மையத்தை நோக்கி, பொதுவான மற்றும் அசாதாரணமான பொது வெளிப்பாட்டின் கலவையான கூறுகள் இருக்கின்றன. இவை சிலருக்கு மட்டுமே வழங்கப்படும் சிருஷ்டிப்பின் அனுபவங்களாகும், ஏனெனில் அவை இடம் அல்லது நேரம் போன்ற சில வழிகளில் வரையறுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, ஒரு பயங்கரமான சூறாவளியின் காற்று தேவனின் வலிமையான சக்தியைக் காட்டுகிறது. ஆனால் பலர் சூறாவளியை அனுபவித்ததில்லை. இமயமலையின் உயரங்கள் தேவனின் மகிமையை வெளிப்படுத்துகின்றன, ஆனால் பெரும்பாலான மனித இனம் இமயமலையை நேரடியாகப் பார்த்ததில்லை. நாம் அனைவரும் பல வரம்புகளை எதிர்கொள்வதால், எல்லா பொதுவான வெளிப்பாடுகளும் எல்லா மக்களுக்கும் எல்லா நேரத்திலும் சென்றடைவதில்லை.

நிறமாலையின் மறுமுனையில் பொதுவான வெளிப்பாட்டின் அசாதாரண கூறுகள் உள்ளன. தேவன் வெளிப்படுத்திய சில உண்மைகளை, ஒரே சத்தியபரரான தேவனை அறியாமலேயே, மக்கள் வெளிப்படையாக



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒப்புக்கொள்ளும் நேரங்கள் இதில் அடங்கும். உண்மை என்னவென்றால் பொது வெளிப்படுத்துதல் என்பது விசேஷமான வெளிப்பாட்டுடன் நாம் அடிக்கடி தொடர்புபடுத்தும் விஷயங்களை உள்ளடக்கியது.

உதாரணமாக, சில கிறிஸ்தவம் அல்லாத மதங்கள் ஒரே தேவன்தான் இருக்கிறார் என்று நம்புகின்றன. பல மதங்கள் உண்மையான கிறிஸ்தவ நம்பிக்கைக்கு இணையான வழிகளில் சாதாரண மற்றும் புனிதமானவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன. பெரும்பாலான மதங்களில் கொலை கண்டிக்கப்படுகிறது. அடிப்படை சமூக நீதி என்பது பல்வேறு நம்பிக்கைகளால் போற்றப்படுகிறது. வேதாகம பண்டைய உலகில், சில குறிப்பிடத்தக்க வழிகளில் உண்மையான வேதாகம நம்பிக்கையுடன் மற்ற மதங்கள் பெரும்பாலும் நெருக்கமாக ஒத்திருந்தன. இன்றும் கூட, சில சுவிசேஷத்தால் சந்திக்கப்படாத மக்கள் கிறிஸ்தவ நம்பிக்கையைப் போன்ற நம்பிக்கைகளைக் கொண்டிருப்பதாக மிஷனரிகள் தெரிவிக்கின்றனர். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், நாம் ”விசேஷமாக்கப்பட்ட பொதுவான வெளிப்பாடு” பற்றி பேசலாம்.

எனவே, இறையியலில் விசேஷமான மற்றும் பொதுவான வெளிப்பாட்டின் பாத்திரங்களைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, அடிக்கடி மறக்கப்படும் இரண்டு விஷயங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒருபுறம், விசேஷமான வெளிப்பாடு ஒப்பீட்டளவில் பொதுவான விஷயங்களைப் பற்றி நமக்குக் கற்பிக்கிறது என்பதை பொதுவான வெளிப்பாட்டின் மூலம் அறியலாம். இதனால்தான், முற்றிலும் மத மற்றும் ஒழுக்க விஷயங்களில் மட்டுமல்ல, அவை வரலாறு மற்றும் அறிவியலைப்பற்றி பேசும்போதும் வேதத்தை நமது அதிகாரமாகப் பார்க்கிறோம்.

மறுபுறம், நாம் பொதுவாக வேதாகமத்திற்கு ஒதுக்கும் விஷயங்களைப் பற்றி பொதுவான வெளிப்பாடுகள் நமக்கு நிறைய கற்பிக்கின்றன என்பதையும் நாம் உணர வேண்டும். உண்மையில், இந்தப் பாடங்களில் நாம் பார்ப்பது போல, வேதவசனங்களால் குறிப்பிடப்பட்ட பல இறையியல் உண்மைகளும் பொதுவான வெளிப்பாட்டிலும் வெளிப்படுத்தப்படுகின்றன. அதனால்தான், தெய்வீக வழிகாட்டுதலுக்கான பொதுவான வெளிப்பாட்டை அதிக ஆவிக்குரிய விஷயங்களில் கூட கவனமாகப் பார்க்க வேண்டும்.

பொதுவான மற்றும் விசேஷமான வெளிப்பாடுகளுக்கு இடையிலான தொடர்புகளை நாம் கருத்தில் கொண்டதால், அவை ஒன்றுடன் ஒன்று பிணைவதை நாம் பார்த்தோம். ஆனால் இப்போது நாம் இரண்டாவதாக கருத்தில் கொள்ளவேண்டிய காரியத்திற்கு நமது சிந்தனையை திருப்ப வேண்டும். இறையியலுக்கு இருவிதமான வெளிப்பாடுகள் ஏன் தேவைப்படுகிறது? அவை ஒவ்வொருவரும் என்ன பங்களிக்கிறது?



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## தேவை

ஒருபுறம், நமக்கு விசேஷமான வெளிப்பாடு தேவை, ஏனென்றால் அது பல வழிகளில் பொதுவான வெளிப்பாட்டைக் காட்டிலும் அதிகமாக உள்ளது. விசேஷ வெளிப்பாடு என்பது பொதுவான வெளிப்பாட்டைக் காட்டிலும் தேவனையும் அவருடைய சித்தத்தையும் குறிப்பிடவும், தெளிவுபடுத்தவும், வெளிப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக, ஆதாம் மற்றும் ஏவாளை நினைத்துப் பாருங்கள். ஆதாமும் ஏவாளும் குற்றமற்ற நிலையில் இருந்தபோது, அவர்கள் பாவத்தில் விழுவதற்கு முன்பு தேவன் அவர்களுக்கு விசேஷமான மற்றும் பொதுவான வெளிப்பாட்டை வழங்கியதை சமீபத்திய தசாப்தங்களில் பல இறையியலாளர்கள் கவனித்துள்ளனர். ஏனெனில் ஆதாம் மற்றும் ஏவாள் பாவம் இல்லாமல் இருந்ததால், அவர்கள் சிருஷ்டிப்பைப் பார்க்கும்போது தேவனைப் பற்றியும் அவருடைய சித்தத்தைப் பற்றியும் அவர்கள் அதிகம் அறிந்து கொண்டார்கள் என்று நாம் உறுதியாக நம்பலாம். ஆயினும்கூட, பாவம் வரும் முன்பே, விசேஷமான வெளிப்பாட்டின் வழிகாட்டுதலின்றி சிருஷ்டிப்பைக் கவனிப்பதன் மூலம் இறையியலை வருவிக்கக்கூடாது. நன்மை தீமை அறியும் விருட்சம், தோட்டத்தை பாதுகாத்தல், பெருகுதல், தோட்டத்தின் எல்லைகளுக்கு அப்பால் நகர்த்துதல் மற்றும் முழு பூமியின் மீதும் ஆதிக்கம் செலுத்துதல் பற்றிய குறிப்பிட்ட வழிமுறைகளுடன் தேவன் ஆதாமுக்கு தனது விசேஷமான வார்த்தையை வழங்கினார்.

நிச்சயமாக, பாவம் உலகிற்கு வந்தவுடன், விசேஷ வெளிப்பாடானது தேவனுடைய மீட்பின் திட்டத்தில் கவனம் செலுத்தியது. நாம் தேவனுடைய நியாயத்தீர்ப்பை பெறுபவர்களாக இருக்கிறோம் என்பதை பொதுவான வெளிப்பாடு வெளிப்படுத்தினாலும், விசேஷமான வெளிப்பாடு மட்டுமே கிறிஸ்துவில் இரட்சிப்பை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக பாவத்தில் விழுந்ததில் இருந்து, சில நேரங்களில் ”இயற்கை இறையியல்” என்று அழைக்கப்படுகிற, பொதுவான வெளிப்பாட்டிலிருந்து இறையியலை உருவாக்கும் செயல்முறையானது, விசேஷமான வெளிப்பாடு மூலம் வழிநடத்தப்பட வேண்டும். இல்லையெனில், சிருஷ்டிப்பில் தேவன் தன்னை வெளிப்படுத்தியதை நாம் தவறாகக் கையாளும் வாய்ப்பு அதிகம் இருக்கிறது.

> இயற்கை இறையியலின் வகைகள் மூலமாக தேவனைப் பற்றி நாம் என்ன கற்றுக்கொள்ளலாம் என்பதில் நான் மிகவும் கவனமாக இருக்க விரும்புகிறேன். ரோமர் 1:20 போன்ற அவரது மகத்துவம், அவரது வல்லமையைப் பற்றி பேசும் ஒரு அறிக்கையின் மீது என் முடிவை வைத்துவிட விரும்புகிறேன். நீங்கள் கற்றுக்கொள்ளக்கூடியவற்றின் அடிப்படையில் நீங்கள் உங்கள் முடிவை வைக்கவேண்டிய விஷயங்கள் இவை என்று நான் நினைக்கிறேன். ஆனால்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> சரியான முன்னோக்கைக் கொண்டிருப்பதற்கு நமக்கு விசேஷமான வெளிப்பாடானது மிகவும் அவசியமாக இருக்கிறது என்பதை நான் உடனடியாகச் சொல்ல விரும்புகிறேன்… எனவே, மனித பகுத்தறிவைச் சரிபார்க்க, தன்னாட்சி, அல்லது நான் சுதந்திரமான மனித பகுத்தறிவு என்று சொல்**லு**கிற சிறப்பான வெளிப்பாடு அவசியமானது. ஏனென்றால் சிருஷ்டிக்கப்பட்ட மண்டலமானது. படித்து, சிக்கலாகப் புரிந்துகொள்ளக்கூடிய சில விஷயங்களைச் சொல்லுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து யதார்த்தமாக வெளிப்பட்ட சிறப்ப்பான வெளிப்பாடானது தேவன் யார் என்பதை துல்லியமாக நிரப்புகிறது.
>
> – Dr. புரூஸ் எல். ஃபீல்ட்ஸ்

விசேஷித்த வெளிப்பாட்டிற்கான நமது தேவையை மனதில் வைத்து, பொதுவான வெளிப்பாட்டிற்கான நமது தேவையையும் நாம் பார்க்க வேண்டும். வேதாகமத்திலிருந்து நமது இறையியலை உருவாக்குவது ஏன் போதுமானதாக இருக்காது? வேதத்தில் நாம் காணாத பொதுவான வெளிப்பாடு எவைகளை பங்களிக்கிறது?

நாம் இங்கு வலியுறுத்தியபடி, வேதத்தின் அதிகாரபூர்வமான வழிகாட்டுதல் இல்லாமல் பொதுவான வெளிப்பாட்டை நாம் ஒருபோதும் அணுகக்கூடாது. ஆனால் அதே நேரத்தில், வேதாகமம் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான விஷயங்களை மட்டுமே நேரடியாகக் குறிப்பிடுகிறது, மேலும் அவைகளை பொதுவான வெளிப்பாட்டின் அகலத்துடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் சில விஷயங்களைப் பேசுகின்றன. உண்மையில், ஒவ்வொரு முறையும் வேதாகம ஆசிரியர்கள் தங்களுக்கு கிடைத்த ஏவுதலால் எழுதப்பட்ட புத்தகங்களை எழுதும்போது, அவர்களும் புத்தகங்களை வாசிப்பவர்களும் பொதுவான வெளிப்பாட்டிலிருந்து பெற்ற அறிவைக் கட்டமைத்தனர். பொதுவான வெளிப்பாடு என்பது விசேஷித்த வெளிப்பாடுகளை தெரிவிக்கக்கூடிய சூழலை வழங்கியது. இன்றும் நமக்கும் அதையே தெரிவிக்கிறது.

பொதுவான வெளிப்பாட்டின் அவசியமானது குறைந்தது இரண்டு வழிகளில் தோன்றுகிறது. ஒருபுறம், பொதுவான வெளிப்பாட்டிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிறவைகள் சிறப்பான வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ள உதவுகிறது. இதைப் பற்றி இவ்வாறு சிந்தித்துப் பாருங்கள்: வேதத்தின் வெளிப்பாட்டைப் பெறுவதற்கு, ஒரு நபர் படிக்க வேண்டும் அல்லது குறைந்தபட்சம் ஒரளவு மொழியைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் நம்மில் எத்தனை பேர் மற்ற ஆதாரங்களின் உதவியின்றி வேதாகமத்தின் வார்த்தைகளை அலசி ஆராய்ந்து மொழியைப்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

படிப்பது அல்லது புரிந்துகொள்வது எப்படி என்று கற்றுக்கொண்டிருக்கிறோம்? கிட்டத்தட்ட நிச்சயமாக பதில் ”இல்லை” என்றுதான் இருக்கும். சிருஷ்டிப்பின் பிற கூறுகளை உள்ளடக்கிய பொருள்கள் மற்றும் செயல்களின் உதவியுடன் நம்மில் பெரும்பாலோர் பெற்றோர் அல்லது பராமரிப்பாளரிடமிருந்து மொழியைக் கற்றுக்கொண்டோம். நாம் பின்னர் அதே வழியில் மற்றவைகளை படிக்க கற்றுக்கொண்டோம். பொதுவான வெளிப்பாட்டின் இந்த அம்சங்களிலிருந்து நாம் கற்றுக்கொண்டவற்றைக் கட்டியெழுப்புவதன் மூலம் மட்டுமே நம்மால் வேதாகமத்தை அணுக முடிந்தது.

நாம் வேதாகமத்தைப் பார்க்கும்போது பொதுவான வெளிப்பாட்டைச் சார்ந்திருப்பது இன்னும் ஆழமானதாக இருக்கிறது. பொதுவான வெளிப்பாட்டிலிருந்து மக்கள் என்ன கற்றுக்கொண்டார்களோ, அது இல்லையென்றால் நாம் படிக்க வேதாகமம் கூட இருந்திருக்காது. பெரும்பாலும் பொதுவான வெளிப்பாட்டிலிருந்து, வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்க்க கற்றுக்கொண்டனர், அச்சகர்கள் எப்படி அச்சிட வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டனர், வெளியீட்டாளர்கள் எவ்வாறு வெளியிடுவது என்பதைக் கற்றுக்கொண்டனர். இந்த அடிப்படை உணர்வுகளிலிருந்து, நாம் பொதுவான வெளிப்பாட்டிற்கு நேராக கவனத்தைச் செலுத்த வேண்டும், ஏனெனில் அது சிறப்பான வெளிப்பாட்டைப் படிக்க நம்மைத் தாயார்படுத்துகிறது.

மறுபுறம், வேதாகமத்தை நம் வாழ்வில் வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கு பொதுவான வெளிப்பாடும் அவசியமாகும். உதாரணமாக, வேதாகமம் பல்வேறு விஷயங்களைப் பற்றி பேசுகிறது மற்றும் பின்பற்றுவதற்கு சரியான கொள்கைகளை போதிக்கிறது. இருப்பினும், இந்தக் கொள்கைகளை அப்பியாசப்படுத்துவதற்கு, எந்த படைப்பிற்கு ஏற்ப அவைகளைப் பயன்படுத்துகிறோம் என்பதைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

புருஷர்கள் தங்கள் மனைவிகளை நேசிக்க வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது, ஆனால் இந்த வேதாகமக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு நாம் பொதுவான வெளிப்பாட்டிலிருந்து சில விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டும். புருஷர் எப்படிப்பட்டவர்? மனைவி எப்படிப்பட்டவள்? ஒரு குறிப்பிட்ட மனைவியிடம் அவளுக்கே உரிய பிரத்யேக சூழ்நிலையில் அன்பு காட்டுவது என்றால் என்ன என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த அர்த்தத்தில் பார்த்தால், வேதத்தை உண்மையுடன் அப்பியாசப்படுத்துதல் எப்போதும் தேவனின் பொதுவான வெளிப்பாட்டைச் சார்ந்தே இருக்கிறது.

எனவே, தேவன் தன்னுடைய பொதுவான மற்றும் சிறப்பான வெளிப்பாடு இரண்டிலும் தன்னை வெளிப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம், மேலும் சிருஷ்டிப்பிலும் வேதாகமத்திலும் அவருடைய வெளிப்பாட்டைக் காண வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். வெளிப்பாட்டின் எந்த வடிவமும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தனித்து நிற்கும் வகையில் வடிவமைக்கப்படவில்லை. நாம் நமது இறையியலைக் கட்டியெழுப்பும்போது இரண்டையும் உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும் என்று தேவன் கட்டளையிட்டிருக்கிறார்.

> விசேஷமான வெளிப்பாட்டைப் பற்றிய நமது அறிவுவானது பொதுவான வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ள உதவுவது போல, பொதுவான வெளிப்பாட்டிலிருந்து நமது வாழ்க்கை அனுபவங்களானது உண்மையில் விசேஷ வெளிப்பாட்டையும் புரிந்துகொள்ள உதவுகிறதாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நம்முடைய வாழ்க்கை அனுபவங்கள் வேதாகமத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. வேதாகமம் முழுவதிலும் இது அடிக்கடி வெளிப்படும் ஒரு வழியாகவும், தேவனைப் பற்றிய விஷயங்களைத் தெரிவிப்பதற்கு வேதாகமம் சிருஷ்டிப்புகளை எவ்வாறு வேண்டுதல் செய்கிறது என்பதாகவும் இருக்கிறது. சங்கீதம் 19, ”வானங்கள் தேவனுடைய மகிமையையும், ஆகாயம்… அவருடைய கரத்தின் கிரியைகளையும் அறிவிக்கிறது” என்று சொல்லும்போது, அது என்ன சொல்கிறது என்றால், நாம் உலகத்தைப் பார்க்கும்போது, சில விஷயங்களைப் பார்க்கிறோம், பிறகு வே**தா**கமத்திடம் வரும்போது, அந்த விஷயங்கள் தேவனைப்பற்றி பற்றி நமக்கு எப்படித் தெரிவிக்கின்றன என்பதைப் பார்க்கிறோம். “நான் என்னை எப்படி விளக்க முடியும் என்று பார்க்கிறேன். ஒரு கனமலை இருக்கிறது. நான் ஒரு கண்மலையைப் போன்றவர்” என்று தேவனே இப்படியெல்லாம் சொன்னார் என்று இல்லை. ஆனால் சிருஷ்டி கர்த்தாவாக, தேவன் கனமலையைப் படைத்தார், அதனால் அவர் திரும்பி, ”நான் கண்மலையைப் போன்றவர்” என்று கூற முடியும். தேவன் தண்ணீரைப் படைத்தார், அதனால் அவர் ”நான் ஜீவத் தண்ணீர்” என்று சொல்ல முடிந்தது. ஏனென்றால் தேவன் சிருஷ்டிப்பின் தேவன் ஆவார், சிருஷ்டிப்பு தேவனின் கவிதையாகும், பின்னர் இதை திறமையான மொழிபெயர்ப்பாளரும், விஞ்ஞானியும், கிறிஸ்துவின் கர்தத்துவத்தின் கீழ், விளக்குகிறார்கள் என்று நீங்கள் பார்க்கிறீர்கள். ஆனால் சிருஷ்டிப்பை ஒரு சித்திரமாக அல்லது உருவகமாகப் பயன்படுத்தி தேவனை வேதாகமம் விவரிக்கும் சூழலைக் கொடுப்பதற்காக, படைப்பானது தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது என்பதை உங்களால் பார்க்க முடியும்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

– Rev. மைக்கேல் ஜே. குளோடோ

தேவனின் வெளிப்பாட்டைக் கண்டுபிடிப்பதற்கு அவருடைய விசேஷமான மற்றும் பொதுவான வெளிப்பாடுகள் இரண்டையும் பார்த்த பிறகு, வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ளுதல் என்ற நமது இரண்டாவது தலைப்புக்கு நேராக சிந்தனையை திருப்புவோம். வெளிப்பாட்டிலிருந்து இறையியலைப் பெறுவதற்கு நாம் அதை எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்?

# வெளிப்பாட்டைப் புரிந்துகொள்ளுதல்

தேவன் தம்மையும் அவருடைய சித்தத்தையும் நமக்கு எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதை நாம் ஒப்புக்கொள்வது ஒரு விஷயம், ஆனால் அதற்கு சரியான இறையியல் பதில்களை உருவாக்குவது வேறு விஷயம். தேவனின் பொதுவான மற்றும் விசேஷமான வெளிப்பாடுகளை முழுமையாக நம்பியிருக்கும் உண்மையான கிறிஸ்தவர்கள் கூட தங்கள் இறையியல்களை உருவாக்கும்போது வெவ்வேறு திசைகளில் செல்கிறார்கள். உண்மையில், முறையான மற்றும் முறைசாரா கிறிஸ்தவ இறையியலின் வரலாறு, மரபுவழி, நடைமுறை இறையியல் மற்றும் சரியான உணர்ச்சிகள் மற்றும் உறவுகள் தொடர்பான பல பிரச்சனைகளில் நமது கருத்து வேறுபாடுகளின் அடிப்படையில் அவைகளை எழுதலாம். இது ஏன் உண்மை? அது ஏனெனில் தெய்வீக வெளிப்பாடு எவ்வாறு நமது இறையியலை பாதிக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது ஒரு சிக்கலான செயல்முறையாகும்.

வெளிப்படுத்தலைப் புரிந்துகொள்வதற்கான இந்த செயல்முறை எவ்வாறு நடைபெறுகிறது என்பதைப் பார்க்க, மூன்று திசைகளில் நம் கவனத்தை செலுத்துவோம். முதலில், பாவத்தினால் உண்டான தடையை ஆராய்வோம். இரண்டாவதாக, பரிசுத்த ஆவியின் வெளிச்சத்தை ஆராய்வோம். மூன்றாவதாக, நமது இறையியலின் இந்த செயல்பாட்டின் முடிவுகளைப் பார்ப்போம். தேவனின் வெளிப்பாட்டை நாம் புரிந்துகொள்ள முற்படும்போது பாவம் எவ்வாறு நம்மைத் தடுக்கிறது என்பதை முதலில் பார்ப்போம்.

## பாவத்தினால் உண்டாகும் தடை

பாவம் மற்றவர்களின் வாழ்வில் மட்டுமல்ல, நம் வாழ்விலும் ஒரு வல்லமையான சக்தியாக இருக்கிறது என்பது கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவருக்கும் தெரியும். உண்மையான விசுவாசிகள் பாவத்தின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கொடுங்கோன்மையிலிருந்தும் பாவத்திற்கு எதிரான தேவனின் நித்திய நியாயத்தீர்ப்பிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பாவம் நம் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் நம்மை தொடர்ந்து பாதிக்கிறது. பாவமானது நம்மை சிதைத்து, வீழ்ந்த உலகில் வாழும் வீழ்ந்த ஜீவிகளாக நமது இறையியலை நாம் கட்டமைக்க விட்டுவிடுகிறது.

அது எவ்வளவு வருத்தமானதாக இருந்தாலும், பாவம் மனிதர்களை கடுமையாக பாதித்துள்ளது என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். உண்மையில், இது மிகவும் கடுமையானது, ஏனென்றால் தேவன் பாவத்தின் தாக்கத்தை கட்டுப்படுத்தாமல் விட்டுவிட்டால், அவருடைய வெளிப்பாட்டை நாம் முழு பலத்துடன் நிராகரிக்கும் இடத்திற்கு நம்மை கொண்டுபோய் விட்டுவிடும். தேவனின் பொதுவான மற்றும் விசேஷமான கிருபையைத் தவிர, தேவனின் வெளிப்பாட்டிலிருந்து நமது இறையியலை அங்கீகரித்து மேம்படுத்துவதற்காக நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் வீணாகிவிடும். பாரம்பரிய இறையியலின் அடிப்படையில், இந்த பிரச்சனை பெரும்பாலும் ”பாவத்தின் மனம்சார்ந்த விளைவுகள்” என்று அழைக்கப்படுகிறது, இது ”மனம்” என்று பொருள்படும் கிரேக்க வார்த்தையான *நோவுஸ் (νοῦς)* என்ற பதத்திலிருந்து வருகிறது. பாவம் நமது அறிவையும் புரிதலையும் எதிர்மறையாக பாதித்த வழிகளை இது குறிக்கிறது.

பாவத்தினால் உண்டான இந்த மனம்சார்ந்த தடையினால் உண்டான விளைவுகளை ஆராய்வதற்கு, பாவம் எவ்வாறு நம் மனதை பொதுவான வெளிப்பாட்டை காணமுடியாமல் இருளடையச் செய்கிறது என்பதையும், பின்னர் அது எவ்வாறு விசேஷமான வெளிப்பாட்டிற்கு அதேபோல் செய்கிறது என்பதையும் பார்ப்போம். பொதுவான வெளிப்பாட்டைப்பற்றி பேசி நாம் ஆரம்பிக்கலாம்.

## பொதுவான வெளிப்பாடு

நாம் முன்பு சொன்னது போலவே, பூமியில் உள்ள ஒவ்வொரு நபருக்கும் பொதுவான வெளிப்பாட்டின் சில பரிமாணங்கள் தெரியும். ஆனால் பாவமானது நமக்குத் தெரிந்தவற்றில் பலவற்றை உள்ளாகவே அடக்கி, பொதுவான வெளிப்பாடுகள் வெளிப்படுத்தும் பலவற்றை நாம் பார்க்கமுடியாமல் குருடாக்குகிறது. ரோமர் 1:18 இல், பொதுவான வெளிப்பாட்டின் உண்மையை அறிந்த பாவமுள்ள புறஜாதிகள், ”தங்கள் அநீதியால் சத்தியத்தை அடக்குகிறார்கள்” என்று பவுல் கூறினார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், சிருஷ்டிப்பின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தப்படும் சத்தியத்தை அடக்குவதற்கு பாவம் நம்மை கட்டாயப்படுத்துகிறது. இதனால் பொதுவான வெளிப்பாட்டை நாம் மறுத்து அதைவிட்டு விலகுகிறோம். இதே அதிகாரத்தில், பவுல் 24-28 வசனங்களில், பொதுவான வெளிப்பாட்டில் வெளிப்படுத்தப்பட்ட தார்மீகக் கொள்கைகளை அவிசுவாசிகள் மீறுவதால், தேவன் அவர்களை ”அவர்களுடைய இருதயத்தின்

இச்சைகளுக்கும்,” ”இழிவான இச்சைரோகங்களுக்கும்” மற்றும் ”கேடான சிந்தனைக்கும்” ஒப்புக்கொடுத்தார்.

இச்சையும் சீரழிவும் நம் இதயங்களை வழிநடத்துகின்றன, இதனால் நாம் குறுகிப்போன அல்லது சேதப்படுத்தப்பட்ட பார்வையை உடையவர்களாக இருக்கிறோம். பொதுவான வெளிப்பாட்டின் எந்த சத்தியத்தையும் நாம் பார்க்க முடியாது என்பதல்ல, நம்மால் பார்க்க முடியும். மாறாக, தேவனின் கிருபையிலிருந்து நாம் அகற்றப்படும் அளவிற்கு, பொதுவான வெளிப்பாட்டின் உண்மைகளை நமது மோசமான ஆசைகளுக்கு நேராக நம்மை இணங்க வைக்கிறோம். உண்மையை பொய் என்றும் பொய்யை உண்மை என்றும் சொல்கிறோம். நல்லதை தீமை என்றும், தீமையை நன்மை என்றும் கூறுகிறோம்.

> ”பாவத்தின் மனம்சார்ந்த விளைவுகள்” என்று நாம் அடிக்கடி சொல்லும் பாவம் மனித மனதை பாதிக்கவில்லை என்று யாராலும் எப்படி நினைக்க முடியும் என்று என்னால் பார்க்க முடியவில்லை, ஏனென்றால் சில சமயங்களில் நாம் சரியாக சிந்திப்பதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. இப்போது, உண்மையாக இருந்து பார்ப்போம். சிலர் வெவ்வேறு சூழ்நிலைகளில் மற்றவர்களை விட சிறப்பாக சிந்திக்கிறார்கள், அதே நபர் ஒரு சூழ்நிலையில் நல்லவராகவும் மற்றொரு சூழ்நிலையில் கெட்டவராகவும் மாறலாம். ஆனால் மனிதர்கள் தவறு செய்கிறார்கள் என்பதே உண்மை. மனிதர்கள் பல்வேறு காரணங்களுக்காக அவர்களைச் சுற்றி பார்க்கும்போது தெரியும் உண்மையை வேண்டுமென்றே புரட்டிப் போடுகிறார்கள்... நல்லது எது தீயது **எது** என்று மக்கள் தவறாக நினைப்பது எளிதான ஒன்றாகும். அதாவது, நம்மில் எத்தனை பேருக்கு தான் நல்லவன் என்று தன்னை மதிப்பிட்ட சூழ்நிலைகள் வந்ததும், அது உண்மையில் நல்லதல்ல என்பதை வே**தா**கமத்திலிருந்து பின்னர் கண்டுபிடித்திருக்கிறதும் நடந்திருக்கிறது? அவர்கள் நன்றாக உணரலாம், அவர்கள் நல்லவர்களாகத் தோன்றலாம், உங்களால் முடிந்த ஒவ்வொரு தரத்தின்படியும் உங்கள் கற்பனையின்படி அவர்கள் பலனளிப்பதாகத் தோன்றலாம், ஆனால் வேதாகமம் ”இல்லவே இல்லை” என்று சொல்லுகிறது. அதுதான் நம் மனதில் இருக்கும் பாவத்தின் விளைவாகும். பாவம் நம் மனதைப் பாதித்துள்ளதால், சில சமயங்களில் வாதங்கள் செய்து, தர்க்கரீதியான சிந்தனை மூலம் சரியான செயல்படுத்தும் வழிமுறைகளைக் கூட எடுக்க முடியாமல் போகிறது என்பதையும் நாம் காண்கிறோம். எனவே, நாம்

எப்பொழுதும் போராட்டத்திலும் பிடித்திருக்க வேண்டிய உண்மை என்னவென்றால், நம்முடைய மிகவும் சுத்திகரிக்கப்பட்ட மற்றும் கவனமான, திறமையான சிந்தனை முறைகள் கூட பாவத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

– Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

ரோமர் 1 ம் அதிகாரம் தெளிவாக தெரியும் பண்புகளின் மூலம் கிடைக்கும் தேவனின் வெளிப்புற வெளிப்பாட்டைப் பற்றி பேசுகிறது, பின்னர் ரோமர் 2ம் அதிகாரம் எது சரி எது தவறு என்று உணரும் பொதுவான வெளிப்பாட்டின் உள் அம்சத்தைப் பற்றி பேசுகிறது. குறிப்பாக அந்த சரி மற்றும் தவறான உணர்வைப் பகுத்தறிவதற்கு, நாம் வேதவசனங்களிடம் செல்ல வேண்டும். நாம் விழுந்துபோனவர்களாக இருக்கிறோம், சரி மற்றும் தவறு பற்றிய நமது உணர்வின் விளக்கம் விழுந்துபோன விளக்கமாக இருக்கிறது, மேலும் நமக்கு இருக்கும் ஒரே புறநிலை தரமானது தேவனுடைய வார்த்தை மட்டுமே. எனவே, நெறிமுறை தரங்களை நாம் அடைவதற்கு வேண்டிய தெளி**வி**ற்கு வேதம் முற்றிலும் அவசியமானதாகும்.

– Dr. ஜெப் லோமேன்

பொதுவான வெளிப்பாட்டை சரியான முறையில் பயன்படுத்துவதில் பாவம் தடையாக இருப்பதைக் கண்டு, நாம் இப்போது விசேஷமான வெளிப்பாட்டிற்கு நேராக நம் கவனத்தைத் திருப்ப வேண்டும். விசேஷமான வெளிப்பாட்டைப் பயன்படுத்துவதை, குறிப்பாக வேதத்தில் காணப்படும் தேவனின் வெளிப்பாட்டை, பாவம் எவ்வாறு பாதிக்கிறது?

## விசேஷித்த வெளிப்பாடு

பாவம் என்பது நாம் வேதத்தைப் புரிந்துகொள்வதற்கு இருக்கும் வெளிப்புறத் தடையை விட அதிகமானதாகும். இது ஒரு உள்ளான தடையாகவும் இருக்கிறது. உதாரணமாக, ரோமர் 7ம் அதிகாரம் பாவத்தை ஒரு உள்ளாக இருக்கும் வேற்று சக்தி என்று விவரிக்கிறது, அது சத்தியத்தை விரும்புவதற்கான நமது திறனைக் கூட மேற்கொண்டுவிடுகிறதாக இருக்கிறது. எனவே, நாம் வேதாகமத்தைக் கையில் எடுக்கும்போது இயற்கையாகவே

> அதை சரியாக விளக்கிக்காட்டிவிடுவோம் என்று நாம் கருத முடியாது. நாம் அப்படி நினைத்தால், நாம் ஒரு பெரிய தவறு செய்கிறோம். வேதாகமத்தின் அர்த்தத்தைப் பற்றிய நமது கருத்து வேறுபாடுகளை இது விளக்குகிறது. நமக்குள் இருக்கும் பாவத்தின் சக்தியை நாம் குறைத்து மதிப்பிடுகிறோம்... அதனால்தான் எபேசியர் 1ல், எபேசியர்களுக்கு அவர் கொடுக்கும் போதனைகளைப் புரிந்துகொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர்களால் பிரகாசிப்பிக்கப்பட வேண்டும் என்று பவுல் தீவிரமாக ஜெபிக்கிறார். எனவே, நாம் விசுவாசிகளாக விரும்பினால், வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்பதைப் புரிந்துகொள்வதில் ஒற்றுமையை நோக்கிச் செயல்பட வேண்டும், நமக்குள் இருக்கும் பாவ சக்தியின் அளவை நாம் எதிர்கொள்ள வேண்டும், அதை வெல்ல ஆவியின் சக்திக்காக ஜெபிக்க வேண்டும், மேலும் வேதாகமத்தின் விளக்கத்தில் ஒற்றுமையை நோக்கி செயல்பட வேண்டும். இவைகளே வேதத்திலிருந்து வரும் கோட்பாடுகளாகும்.
>
> – Dr. ஆண்ட்ரூ பார்லி

பாவமுள்ள மனிதர்கள் தேவனின் இரக்கமின்றி விட்டுவிட்டால் வேதத்தின் போதனையை எதிர்க்கிறவர்களாக இருப்பார்கள் என்பதை வேதமே நமக்கு காட்டுகிறது. யோவான் 5:39, 40ல், பரிசேயர்கள் பழைய ஏற்பாட்டை தவறாகப் பயன்படுத்தினார்கள் என்று இயேசு இதைப் பற்றிக் கூறினார். 2 பேதுரு 3:15, 16 இல் பேதுரு, வேதாகமத்தின் மற்ற பகுதிகளைப் போலவே பவுலின் எழுத்துக்களையும் மக்கள் திரித்துக் கூறுவதாக சொன்னபோது, பேதுருவும் அதே கருத்தைக் கூறினார். தேவனின் கிருபைக்கு அப்பால் போகும்போது, பாவமுள்ள மனிதர்கள் வேதவசனங்களை தவறாகக் கையாளவும் தவறாகப் பயன்படுத்தவும் முனைகிறார்கள்.

வேதாகமத்தை பாவமான முறையில் தவறாக விளக்குவதால் உண்டாகும் இந்த பிரச்சனை அவிசுவாசிகளுக்கு மட்டுமானதல்ல. இது விசுவாசிகளையும் பாதிக்கிறது. 17, 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளின் ஆப்பிரிக்க அடிமை வியாபாரத்தை வேதம் ஆதரிப்பதாக எத்தனை ஐரோப்பிய மற்றும் அமெரிக்க இறையியலாளர்கள் நம்பினார்கள் என்பது எளிதில் நினைவுக்கு வரும் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறது. இது எப்படி நடந்தது? கிறிஸ்தவர்களால் வேதத்தை எப்படி தவறாக புரிந்து கொள்ள முடியும்? இந்த கேள்விக்கான பதில் என்னவென்றால், வேதத்தை கையாளும் விசுவாசிகளின் திறனைக்கூட பாவம் தடுக்கிறது. நமது புத்தியின் பலம் அல்லது நமது வேதாகம அறிவின் ஆழம் எப்படிப்பட்டதாக இருந்தாலும், நாம் அனைவரும் ஏதோவொரு வகையில் விசேஷமான வெளிப்பாட்டைத் திரித்து,

சிதைக்கிறோம் என்பதை நாம் முழுமையாக நம்ப வேண்டும். நமது குறைபாடுகள் மற்றும் ஒருதலையாக இருக்கும் நமது சார்புகளை நாம் எவ்வளவு அதிகமாக அறிந்திருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக இந்த விதத்தில் தவறாக புரிந்துகொள்வதை நாம் தடுக்க முடியும். ஆனால் வருத்தப்படும் விதமாக, நாம் அனைவரும் வேதத்தைத் தவறாகப் புரிந்துகொண்ட சில வழிகளைப் பற்றி அறியாமல் கல்லறைக்குச் செல்வோம்.

> வேதாகமத்தின் நமது விளக்கங்கள் வேதாகமத்தின் அதிகாரத்திற்கு நம்மை பொறுப்பாளர்களாக்குகிறது, நமது விளக்கத்தின் அதிகாரத்திற்கு வேதாகமம் எந்த விதத்திலும் பொறுப்பாகாது. இப்போது, நாம் அதை எப்படி புரிந்துகொள்கிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். வேதத்தை நம்மால் துல்லியமாகப் புரிந்து கொள்ள முடியாது என்று நாங்கள் குறிப்பிட விரும்பவில்லை... ஆனால் நம்முடைய விளக்கங்கள் வேதவாக்கியங்களுக்கு பொறுப்புடையதாக இருப்பதை நாம் எப்போதும் அனுமதிக்க வேண்டும். நாம் தவறாகப் விளக்கம் கொடுக்க வாய்ப்புள்ளது. தொடர்புடைய எல்லா தரவையும் கருத்தில் கொள்ளாமல் இருப்பதற்கும் சாத்தியம் உண்டு. அசலாக எழுதப்பட்டபோது இருந்த வரலாற்று சூழ்நிலையைப் பற்றி நாம் தவறவிட்ட சில தகவல்கள் இருக்கலாம். எனவே, வேதம் கற்பிக்கிறவற்றின் வெளிச்சத்தில் நமது விளக்கங்கள் திருத்தப்படக்கூடியவை என்பதை நாம் எப்போதும் புரிந்து கொள்ள விரும்புகிறோம், மேலும் அந்த வேதாகம அதிகாரத்திற்கு நேராக மீண்டும் மீண்டும் வந்துவிடுகிறோம் .
>
> – Dr. ராபர்ட் ஜி. லிஸ்டர்

பாவத்தினால் உண்டாகும் தடையானது பொதுவான மற்றும் விசேஷமான வெளிப்பாட்டைச் சரியாகக் கையாள்வதற்கான நமது திறனை எவ்வாறு ஆழமாகப் பாதிக்கிறது என்பதை இப்போது நாம் பார்த்தோம். பரிசுத்த ஆவியின் ஒளியூட்டலால் வெளிப்பாட்டைப் புரிந்துகொள்வதற்கான நமது சிறந்த நம்பிக்கையை நோக்கி நாம் திரும்ப வேண்டும்.

## பரிசுத்த ஆவியின் ஒளியூட்டுதல்

மாணவர்களும் அறிஞர்களும் ஒரே மாதிரியாக, தேவனின் வெளிப்பாட்டின் அடிப்படையில், வெறுமனே கடினமாக உழைப்பதன் மூலம், நல்ல கிறிஸ்தவ இறையியலைக் கட்டியெழுப்ப முடியும் என்பது போல் செயல்படுகிறார்கள். கடுமையான தர்க்கரீதியான முறைகளைப் பின்பற்றுவது

மரபுவழி, நடைமுறை இறையியல் மற்றும் சரியான உணர்ச்சிகள் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றின் இலக்குகளை அடைய உதவும் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆனால் இது வெறுமனே இங்கு சொல்லப்படும் காரியம் அல்ல. இப்போது, நமக்கு கொடுக்கப்பட்ட ஊழியத்திற்கு ஏற்ப உண்மையுள்ள ஊழியர்களாக நாம் நிச்சயமாக நம்மை பிரயோகிக்கவேண்டும், ஆனால் பாவத்தின் தாக்கத்தை மேற்கொள்வதற்கு, நாம் இன்னும் அதிக தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. திரித்துவத்தின் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவருடன் நாம் தனிப்பட்டவிதத்தில் தொடர்புடையவர்களாக இருக்க வேண்டும். நமது இறையியலில் தேவனின் வெளிப்பாட்டை நாம் புரிந்துகொண்டு சரியாகப் பிரயோகிக்க அவர் நம் மனதை ஒளிரச் செய்கிறார்.

நம் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட ஊழியத்தின் விளைவாக, தேவனின் வெளிப்பாட்டிலிருந்து உண்மையான இறையியலை எந்த அளவிற்கு பெறுகிறோம் என்பதை கிறிஸ்தவர்கள் அடிக்கடி புரிந்துகொள்வதில்லை. மாறாக, மனிதர்களாகிய நம்மிடம் உள்ள இயல்பான திறன்களில் நம்பிக்கை வைக்கிறோம். அறிவொளி நவீனத்துவ உணர்வின் அடிப்படையில், நம்முடைய பகுத்தறிவையும் தேவனின் வெளிப்பாட்டிற்கு நன்கு வரையறுக்கப்பட்ட முறைகளையும் பயன்படுத்தினால், உண்மையான இறையியலை உருவாக்க முடியும். ஆனால் உண்மையில், நம்முடைய பகுத்தறிவு திறன்கள் எல்லாம் சிருஷ்டிப்பின் வீழ்ச்சியடைந்த நிலையில் இருந்து தனிமைப்படுத்தப்பட்டு செயல்படுவதாக இருப்பதில்லை. நம்முடைய வீழ்ந்த நிலையில், நமது மொழியியல் மற்றும் தர்க்கரீதியான திறன்களையும் நம் மனதையும் பாவம் இருளடையச்செய்திருக்கிறதினால் நாம் அடிக்கடி வெளிப்பாட்டைச் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறிவிடுகிறோம். நமது பகுத்தறிவு, மொழியியல் மற்றும் அனுபவ திறன்களை மேம்படுத்துவதும் நமக்கு தேவைப்படுகின்றவைகளில் ஒன்றாகும். பொதுவான வெளிப்பாடுகளையும் விசேஷமான வெளிப்பாடுகளையும் உண்மையில் உள்ளதைப் போலவே புரிந்துகொள்வதற்கும், உண்மையான இறையியலை உருவாக்குவதற்கும் நமக்கு அவைகளே தேவையான ஒன்றாகும். தேவ ஆவியின் வெளிச்சத்தால் மட்டுமே நம்முடைய குருட்டுக் கண்களுக்கு அத்தகைய ஒளியைக் கொண்டுவர முடியும்.

பரிசுத்த ஆவியின் பிரகாசத்தை ஆராய்வதற்கு, அவர் எவ்வாறு விசேஷமான வெளிப்பாட்டின் நுண்ணறிவை வழங்குகிறார் என்பதையும், பின்னர் பொதுவான வெளிப்பாட்டையும் காண அவர் எவ்வாறு நம் கண்களைத் திறக்கிறார் என்பதையும் பார்ப்போம். நாம் விசேஷித்த வெளிப்பாட்டுடன் தொடங்குவோம்.

## விசேஷித்த வெளிப்பாடு

பாரம்பரிய புராட்டஸ்டன்ட் இறையியலில், விசேஷமான வெளிப்பாட்டைப் பற்றிய நுண்ணறிவைக் கொடுக்கும் ஆவியின் கிரியைக்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

”ஒளியூட்டுதல்” என்ற சொல் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. *பரிசுத்த ஆவியானவர் நமக்குள் கிரியை செய்கிறார், நம்முடைய மனதைப் புதிதாக்குகிறார், இதனால் நாம் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும், பிரயோகிக்கவும் முடியும். இந்த உண்மையை எபேசியர் 1:17-18ல் பவுல் கூறிய விதத்தை கவனியுங்கள்.*

> நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்; நீங்கள் அறியும்படிக்கு, வேண்டிக்கொள்ளுகிறேன். அதற்காகவே அவர் உங்களை அழைத்தார் (எபேசியர் 1:17-18).

விசேஷித்த வெளிப்பாட்டின் ஆவியானவரின் வெளிச்சம் வெவ்வேறு வழிகளில் கிரியை செய்கிறது என்பதை உணர வேண்டியது அவசியம். ஒருபுறம், தேவனின் ஆவியானவர் இரட்சிப்பை உண்டாக்காத மற்ற வழிகளிலும் செயல்படுகிறார் என்று வேதம் தெளிவுபடுத்துகிறது, இதனால் அவிசுவாசிகள் கூட விசேஷித்த வெளிப்பாட்டின் பல அம்சங்களைப் புரிந்துகொள்கிறார்கள்.

உதாரணமாக, எண்ணாகமம் 24:2 இன் படி, தேவனுடைய ஆவியானவர் பிலேயாம் என்ற புறஜாதி தீர்க்கதரிசியின் மீது வந்து, அவருக்கு நுண்ணறிவை வழங்கினார். மேலும் யோவான் 11:49-51ல், இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது, பிரதான ஆசாரியராக முக்கியப் பங்கு வகித்த காய்பா, இயேசுவின் மரணம் பற்றிய அர்த்தத்தைக் குறித்து உண்மையாகவே தீர்க்கதரிசனம் உரைத்தார். மத்தேயு 21:45, 46 இல், துன்மார்க்க குத்தகைதாரர்களைப் பற்றிய இயேசுவின் உவமை அவர்களுக்குப் பொருந்தும் என்பதை பரிசேயர்கள் புரிந்துகொண்டனர், ஆனால் அவர்கள் உண்மையான மனந்திரும்புதலைக் காட்டாமல், கொலைகார சதித்திட்டத்தை அதற்கு பதிலாக தீட்டினார்கள். இதேபோல், எபிரெயர் புத்தகத்தின் எழுத்தாளர், 6:4 இல், யாருடைய இரட்சிப்பைப் பற்றி அவர் பின்னர் கேள்வி எழுப்பினார்களோ அந்த மக்களுக்கு ஆவியின் ஒளியூட்டுதலைப் பற்றி குறிப்பாகப் பேசினார்.

இந்த உதாரணங்களை, பொதுவான கிருபையின் சூழலில் ”ஆவியின் பொதுவான செயல்பாடுகள்” என்று அழைக்கலாம். ஆவியானவர் இவ்வுலகில் இரட்சிப்பை உண்டாக்குவதற்காக இல்லாமல், செய்யும் பல கிரியைகளில் சில இவைகளே. இதனால்தான் அவிசுவாசிகள் கூட வேதாகமத்துடன்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

ஒத்துப்போகும் இறையியலைப் புரிந்துகொண்டு கற்பிக்க முடிகிறது. அவர்கள் இரட்சிக்கப்படாவிட்டலும், ஆவியானவர் அவர்கள் மீது செய்த கிரியையின் விளைவு இதுவேயாகும்.

அதே நேரத்தில், சபையானது ஆவியின் ஆலயம் என்பதை நினைவில் கொள்வது அவசியம். சபையானது உலகில் அவரது விசேஷமான சேமிப்பு கிடங்காகவும் ஊழியத்தின் களஞ்சியமாகவும் இருக்கிறது. தேவனுடைய இரட்சிப்பைப்பற்றிய வார்த்தையைப் பற்றிய அறிவை, மீட்கப்பட்ட மக்களுக்கு அவர் அளிக்கிறார். எனவே, அவிசுவாசிகளை விட விசுவாசிகளிடையே ஆவியானவரின் பிரகாசிக்கும் கிரியையானது அதிகமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்கும். உண்மையில், விசுவாசிகளான இறையியலாளர்கள் எப்பொழுதும் ஆவியானவரிடமிருந்து அவிசுவாசிகளுக்கு எட்டாத வழிகளில் கற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பது சரியாக இருக்கும்.

விசேஷமான வெளிப்பாட்டிற்கு ஆவியானவர் நம் மனதை ஒளியூட்டுவதன் முக்கியமான பங்கானது, ஒவ்வொரு கிறிஸ்தவ இறையியலாளர்களுக்கும் மிக முக்கியமான ஒரு விஷயத்தை எழுப்பிக்காட்டுகிறதாக இருக்கிறது. தேவனின் ஆவியானவர் மட்டுமே நம்மை ஒளிரச் செய்வதால், கிறிஸ்தவ இறையியலாளர்கள் உணர்வுப்பூர்வமாகவும் உண்மையுடனும் ஆவியுடன் படிப்படியாக முன்னேறுவதற்குத் தங்களை அர்ப்பணிக்க வேண்டும். கிறிஸ்தவ இறையியல் என்பது நம் சொந்த பலத்தில் நாம் நிறைவேற்றும் ஒரு தனிப்பட்ட திட்டம் கிடையாது. விசேஷமான வெளிப்பாட்டிலிருந்து உண்மையான இறையியலைப் பெறுவோமென்று நாம் நம்பினால், பரிசுத்த ஆவியின் ஊழியத்திற்காக தனிப்பட்ட தொடர்பு மற்றும் சுத்திகரிக்கப்பட்ட உணர்திறன் தேவைப்படுகிறது. கிருபையின் ஆவியானவருடைய வழிநடத்துதலை அடையும்படிக்கு நாம் முழு மனதுடன் நம்மையே அர்ப்பணிக்க வேண்டும். இதன் மூலமாக மட்டுமே நமது இறையியலின் முடிவுகள் வேதவசனங்களிலிருந்து சரியாகப் பெறப்படுகின்றன என்று நம்புவதற்கு நமக்கு அடிப்படைகள் இருக்கின்றன.

> ஒரு மட்டத்தில் வேதத்தின் ஒரு பகுதியையும் அதனுடைய சூழலையும் புரிந்துகொண்டு, அல்லது ஆசிரியரின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு அல்லது மொழிபெயர்க்கும் வகையில் எழுதப்பட்ட மொழியைப் புரிந்துகொண்டு செயல்படும் ஒரு விசுவாசியை விட, ஒரு அவிசுவாசி வேதத்தின் ஒரு பகுதியை மட்டும் எடுத்து ஒரு சிறந்த வேலையைச் செய்ய முடியும். எனவே, இந்த தனி வழியில், ஒரு அவிசுவாசி வேதத்தைப் படித்து, ஒரு உண்மை நிலைப்பாட்டில் இருந்து அல்லது அங்குள்ள மொழியைப் பற்றிய இந்த பகுதிகளைப் புரிந்துகொள்வதால் பெறுவது, ஒரு விசுவாசி படிக்கும்போது பெரும் வெளிப்பாடு அளவிற்கு



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> ஏற்ப இருக்க முடியும் என்றும் நீங்கள் கூறலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் நாம் மேலும் மேலும் சுத்திகரிக்கப்படவேண்டும் என்றும், மேலும் பரிசுத்த ஆவியானவர் காலப்போக்கில் வேதத்திலிருந்து தேவன் சொல்ல விரும்புகிறதைத் திறந்து கொடுப்பதில் மேலும் மேலும் சுறுசுறுப்புடன் இருக்க வேண்டும் என்றும் விரும்புகிறார். எனவே, அவிசுவாசியும் விசுவாசிகளும் வித்தியாசமாக விஷயங்களை அணுகப் போகும் அடிப்படை இடங்களில் ஒன்று இது என்று நான் நினைக்கிறேன்.
>
> – Dr. டிம் சான்ஸ்பரி

விசேஷித்த வெளிப்பாட்டினுடைய ஆவியானவரின் வெளிச்சத்தை மனதில் கொண்டு, வெளிச்சம் மற்றும் பொதுவான வெளிப்பாட்டிற்கு நேராக நமது சிந்தனையைத் திரும்புவோம்.

## பொதுவான வெளிப்பாடு

வேதாகமத்தில் உள்ள தேவனின் விசேஷமான வெளிப்பாட்டை நாம் அணுகும்போது, நமக்குப் பரிசுத்த ஆவியின் வெளிச்சம் தேவை என்பதை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் உடனடியாக ஒப்புக்கொள்வார்கள். நம்மில் பலர் வேதவசனங்களைப் படிக்கத் தொடங்குவதற்கு சற்று முன்பு தவறாமல் ஜெபிக்கிறோம், ஏனென்றால் ஆவியின் உதவி நமக்கு எவ்வளவு தேவை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் பொதுவான வெளிப்பாட்டைப் பற்றி சிந்திக்கும்போது நமக்கு பரிசுத்த ஆவியின் தனிப்பட்ட ஊழியமும் தேவைப்படுகிறது. சிருஷ்டிப்பின் மூலம் வந்த தேவனின் வெளிப்பாடானது மிகவும் பரந்ததாகவும் மற்றும் பல பாகங்களைக் கொண்டதாகவும் இருக்கிறபடியால், நாம் கிறிஸ்தவ இறையியலைப் படிக்கும்போதும் வாழும்போதும் நமது இயற்கை திறன்களை விட நமக்கு ஞானம் தேவைப்படுகிறது. இந்த வகையான ஞானத்தை யார் கொடுப்பது? தேவனின் ஆவியானவர் தான் அதை கொடுப்பார்.

தானியேல் 5:14 ல், அந்நிய ஜாதி ராஜாவான பெல்ஷாத்சார், தானியேலின் ஞானம் தெய்வீக தோற்றம் கொண்டது என்பதை அங்கீகரித்தார். நீதிமொழிகள் 2:6 ல், எல்லா ஞானமும் தேவனிடமிருந்து வருகிறது என்று வாசிக்கிறோம். இதேபோல், யாத்திராகமம் 31:3 இன் படி, கைவினைஞர்களான பெசலெயேல் மற்றும் அகோலியாப் ஆகியோர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டதால் கைவினைத்திறனை சிறப்பாக செய்தார்கள். ஆவியின் வெளிச்சமானது விசேஷமான வெளிப்பாட்டிற்கு மட்டும் அவசியமானதாக இல்லாமல், பொதுவான வெளிப்பாட்டிற்கும் அவசியமாக இருக்கிறது என்பதை இந்த பகுதியும் இதே போன்ற பிற பகுதிகளும் நமக்குக் கற்பிக்கின்றன. ஜான்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கால்வினின் ‘இன்ஸ்டிடியூட்’ என்ற 2 ஆம் புத்தகத்தில், அத்தியாயம் 2 இல் கூறியதைக் கேளுங்கள். பொதுவான வெளிப்பாட்டில் இருக்கும் உண்மையை மக்கள் கண்டறியும் போது அவர் ஆவியின் கிரியையைப் பற்றி இங்கே பேசினார்:

> மதச்சார்பற்ற எழுத்தாளர்கள் இந்த காரியங்களைக் குறித்து எழுதுவது நம் கவனத்திற்கு வரும்போது, அவற்றில் பிரகாசிக்கும் சத்தியத்தின் ஒளிரும் வெளிச்சம், மனிதனின் மனம், அதன் முழுமையிலிருந்து விழுந்து திசை திருப்பப்பட்டிருந்தாலும், அது தேவனின் அருமையான வரங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது என்பதை நமக்குக் போதிக்கட்டும். தேவனுடைய ஆவியை சத்தியத்தின் ஒரே நீரூற்று என்று நாம் கருதினால், நாம் சத்தியத்தை நிராகரிக்கவோ, எங்கு அது தோன்றினாலும் அதை வெறுக்கவோ மாட்டோம். ஆனால் அவரை நாம் அவமதிக்காமல் இருக்க வேண்டும்… ஆனால் கர்த்தர் விரும்பியிருந்தால் இயற்பியல், இயங்கியல், கணிதம் மற்றும் பிற துறைகளில் தேவபக்தியற்றவர்களின் வேலை மற்றும் ஊழியத்தால் நமக்குக் கிடைக்கும் அவர்களின் உதவியைப் பயன்படுத்துவோம்.

கால்வின் விளக்கியபடி, தேவனுடைய ஆவியானவர் விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் பொதுவான வெளிப்பாட்டின் உண்மையைக் கற்பிக்கிறார். அவர்தான் ’சத்தியத்தின் ஒரே ஊற்று’ ஆவார். இந்த காரணத்திற்காக, மாம்சத்தின் வல்லமையில் கிறிஸ்தவ இறையியலைக் கட்டியெழுப்ப முயற்சிப்பது என்பது, பொதுவான வெளிப்பாடு தொடர்பான விஷயங்களில் கூட, மாம்சத்தின் வல்லமையில் இரட்சிப்பைத் தேடுவதைப் போலவே முட்டாள்தனமானதாகும்.

தேவனுடைய வெளிப்பாட்டிலிருந்து இறையியலை வெற்றிகரமாகப் பெறுவது தானாகவே நடக்கும் அல்லது நீங்களும் நானும் நம் சொந்த பலத்தில் செய்யக்கூடிய ஒன்று அல்ல என்பது தான் இதன் அர்த்தமாகும். இது சரியாக செய்யப்படும் போது, வெளிப்படுத்தலைப் புரிந்துகொள்வது ஒரு தாழ்மையான, ஆவிக்குரிய அனுபவமாகும், இதில் நாம் தொடர்ந்து நமது இயற்கையான திறன்களின் வரம்புகளுக்குள் விழுந்து, தேவனுடைய ஆவியை நாம் சார்ந்திருத்தலைத் தொடர்ந்து புதுப்பித்துக் கொள்கிறோம்.

> எனவே, கால்வின் சத்தியத்தை அவமதிக்காலிருப்பதைப் பற்றி பேசும்போது, அவர் இதைச் சொல்லும் சூழலை நினைவில் கொள்வது முக்கியம் … இதைச் சொல்வதில் அவருடைய நோக்கம் என்னவென்றால், மனிதவர்க்கம் சத்தியத்தைத் தேடுவதற்கு ஏதுவானதாக இருக்கிறது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> என்பதுதான். உதாரணமாக, விலங்குகளிடமிருந்து நம்மை வேறுபடுத்திக் காட்டும் விஷயங்களில் இதுவும் ஒன்றாகும், அதாவது சத்தியத்தைப் பின்தொடர்வதை நோக்கிய உள்ளார்ந்த நாட்டம் நம்மிடம் உள்ளது. எனவே, தேவன் சத்தியத்தின் ஊற்றாக இருக்கிறார். மேலும் அவர் மனிதர்களிடம் சத்தியத்தை பேசுகிறார். ஆனால் அவர் அவரைப் பொறுத்த வரை ஒரு வழியில் அவ்வாறு செய்கிறார். இது நமக்குப் பொருந்தாது. சத்தியம் மனிதனிடத்தில் இல்லை, அது தேவனில் இருக்கிறது… எனவே, எங்கெல்லாம் உண்மையைக் காண முடியுமோ அங்கெல்லாம் அதை நிராகரிக்காமல் இருப்பது பற்றி கால்வின் பேசும் போது, அல்லது அது கிறிஸ்தவ வட்டத்திற்கு வெளியே இருந்தால் அதைக் கண்டனம் செய்வது பற்றி பேசும்போது, சத்தியம் இறுதியில் தேவனுடையது என்கிறார், மேலும் ஏதோ ஒரு வகையான மனிதப் பங்களிப்பின் விளைவு அல்ல என்பதை அங்கீகரிக்கும் விதத்தில் அவர் அவ்வாறு செய்கிறார் என்று நான் நினைக்கிறேன்.
>
> – Dr. ஸ்காட் மனோர்

பாவத்தின் மூலம் வருகிற தடையின் இயக்கவியலும், பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாட்டைப் பற்றிய நமது புரிதலில் பரிசுத்த ஆவியின் ஒளியூட்டுதலும் நமது இறையியலை உருவாக்கும் செயல்பாட்டில் சில முடிவுகளை எதிர்பார்க்க நம்மைத் தயார்படுத்துகின்றன. பெரும்பாலும் பாவத்திற்கும் ஆவிக்கும் இடையிலான பதற்றமானது, விசேஷமான மற்றும் பொதுவான வெளிப்பாட்டின் கண்டுபிடிப்புகள் இணக்கமற்றதாகத் தோன்றும் சூழ்நிலைகளை எதிர்கொள்ள நம்மைத் தூண்டுகிறது.

## முடிவுகள்

வேதாகமம் போதிக்கிறது என்று நாம் நம்பும் ஒவ்வொன்றும் பொதுவான வெளிப்பாட்டைப் பற்றிய நமது புரிதலோடு சுலபமாகப் பொருந்துகிறவரை, இறையியலைக் கட்டியெழுப்புவது ஒப்பீட்டளவில் எளிமையானதாகும். தொல்பொருள் சான்றுகள் அதை ஆதரிக்கும் வரை வேதாகமத்தின் வரலாற்று பதிவு உண்மை என்று நம்புவது கடினம் அல்ல. நமது கலாச்சார பழக்கங்கள் ஒத்துப்போகும் வரை வேதாகமத்தில் கற்பிக்கப்படும் நடத்தையின் தராதரங்களை நிலைநிறுத்துவது கடினம் அல்ல. நம்முடைய அன்றாட அனுபவங்களுடன் அவை சுலபமாகப் பொருந்துகிறவரை, நம்முடைய உணர்ச்சிகளைப் பற்றி வேதவசனங்கள் என்ன போதிக்கின்றன என்பதை நாம் சுலபமாக உறுதிப்படுத்துகிறோம். ஆனால் அதை எதிர்கொள்வோம்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பெரும்பாலும் நாம் வேதத்தில் ஒரு விஷயத்தைப் படித்து, வாழ்க்கையின் நமது பரந்த அனுபவத்தில் அதற்கு முரணாகத் தோன்றும் ஒன்றைக் கண்டுபிடிப்போம். நாம் பார்த்தபடி, கிறிஸ்துவின் சீஷர்கள் தேவனுடைய பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடுகள் இரண்டிலும் இறையியலைக் கட்டியெழுப்ப வேண்டும். எனவே அவைகள் ஒன்றுக்கொன்று இணக்கமற்றதாகத் தோன்றும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

முதலாவதாக, பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடானது உண்மையில் ஒன்றுக்கொன்று முரண்படுவதில்லை என்ற உறுதியான நம்பிக்கையுடன் இத்தகைய சூழ்நிலைகளில் நாம் நுழைய வேண்டும். பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடு இரண்டிலும், ஒரே தேவன் தான் பேசுகிறார். அவரால் பொய் சொல்ல முடியாது, சத்தியத்தை மட்டுமே பேசுகிறார். மேலும், சிருஷ்டிப்பில் வெளிப்படுத்துகிறதை, அவர் வேதவசனத்தில் வெளிப்படுத்துகிறவற்றோடு ஒப்புரவாக்குவதில் தேவனுக்கு எந்தச் சிரமமும் இல்லை என்பதையும் நாம் உணர வேண்டும். வெளிப்பாட்டின் இந்த இரண்டு ஆதாரங்களும் நமக்கு எவ்வளவு முரண்பட்டவையாகத் தோன்றினாலும், தேவனுடைய கண்ணோட்டத்திலிருந்து, உண்மையில், அவை உண்மையானவை மற்றும் மிகவும் இணக்கமானவை என்பதையும் நாம் அறிவோம்.

இரண்டாவதாக, விசேஷித்த மற்றும் பொதுவான வெளிப்படுத்தலிலிருந்து நாம் அறிந்திருப்பது, வெளிப்படுத்துதலைப் பற்றிய நமது *புரிதல்களோடு* சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதையும் வெளிப்படுத்தலுடன் ஒருபோதும் சம்பந்தப்பபட்டிருக்கவில்லை என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த புரிதல்கள் எப்போதும் பரிபூரணத்திற்கு குறைவாக உள்ளன. பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாடு இரண்டும் தேவனில் இருந்து வந்ததால் உண்மையில் அவைகளுக்கிடையில் ஒருபோதும் முரண்பாடு வரவில்லை, அவைகளை பற்றிய நமது புரிதல்கள் நிச்சயமாக முரண்படலாம். ஏனென்றால் அவைகள் மனிதனிடமிருந்து வரவில்லை.

மற்றும் பொதுவான வெளிப்பாட்டிற்கு இடையில் வெளிப்படையான முரண்பாடுகளை நாம் எதிர்கொள்ளும்போது, நிலைமையை மதிப்பிடுவதற்கு நான்கு முக்கிய வழிகள் உள்ளன. முதலாவதாக, விசேஷ வெளிப்பாட்டை நாம் தவறாகப் புரிந்துகொண்டு, வேதத்தையே நிராகரிக்காமல் வேதாகமத்தைப் பற்றிய நமது விளக்கத்தை மாற்ற வேண்டும் என்பது எப்போதும் சாத்தியமாகும்.

இரண்டாவதாக, பொதுவான வெளிப்பாட்டை நாம் தவறாகப் புரிந்துகொண்டதால் மோதல் எழலாம். வேதவசனங்களால் திருத்தப்பட வேண்டிய அனுபவத்திலிருந்து அடிக்கடி நாம் தீர்மானங்களை எடுக்கிறோம்.

மூன்றாவதாக, விசேஷித்த மற்றும் பொதுவான வெளிப்பாடு இரண்டையும் நாம் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். உலகின் நமது அனுபவங்கள் வேதாகம போதனையுடன் பொருந்துவதாகத் தெரியவில்லை என்பது எப்போதும் சாத்தியமானதாகும். ஏனென்றால், வேதாகமத்தைச்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சரியாகப் புரிந்துகொள்ளத் தவறிவிட்டோம், நமது அனுபவங்களைச் சரியாக மதிப்பிடத் தவறிவிட்டோம்.

நான்காவதாக, நமது மனித புரிதலுக்கு அப்பாற்பட்ட ஒரு மர்மத்தை நாம் எதிர்கொண்டிருக்கலாம். எடுத்துக்காட்டாக, திரித்துவத்தைப் பற்றி சிந்தியுங்கள். பொதுவான வெளிப்பாட்டின் நமது அனுபவமானது நிச்சயமாக மூன்று நபர்கள் ஒன்றாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க நம்மை வழிநடத்தாது. ஆனாலும், தேவனைப் பற்றி வேதம் நமக்குக் கற்பிப்பது இதுதான். இந்த இரண்டு கண்ணோட்டங்களையும் நாம் எப்படி சமரசம் செய்ய முடியும்? நம்மால் முடியாது. திரித்துவத்தின் கோட்பாடு நம் புரிதலுக்கு அப்பாற்பட்ட ஒரு மர்மமாகும்.

இப்போது, ஒரு நடைமுறை விஷயமாக, இந்த நான்கு சூழ்நிலைகளில் எதை நாம் எதிர்கொள்கிறோம் என்பதை நாம் எப்போதும் சொல்ல முடியாது. பல முறை, நாம் வெறுமனே நிரூபணத்தின் சுமையை எங்கே வைக்கிறோம் என்பதன் அடிப்படையில் செயல்பட வேண்டும். வேதவாக்கியத்தை நாம் வியாக்கியானம் செய்வதன் மீதோ அல்லது பொதுவான வெளிப்பாட்டைப் பற்றிய நமது வியாக்கியானத்தின் மீதோ நிரூபணத்தின் பாரமான சுமையை நாம் வைக்கிறோமா? சரி, கிறிஸ்தவர்கள் இந்த விஷயத்தில் வெவ்வேறு திசைகளில் செல்கிறார்கள்.

ஒரு புறம், அதிக தாராளவாதிகளாகக் கருதப்படும் கிறிஸ்தவர்கள், வேதாகமத்தைப் பற்றிய புரிதலைக் காட்டிலும், பொதுவான வெளிப்பாட்டைப் பற்றிய தங்கள் புரிதலை எளிதில் ஏற்றுக்கொள்ள முனைகிறார்கள். ஆனால் பழமைவாத கிறிஸ்தவர்கள் ஒரு மோதல் எழும் போது பொது வெளிப்பாட்டை விட விசேஷித்த வெளிப்பாட்டை ஏற்றுக்கொள்கிறார்கள்.

இரண்டாவது வியூகம் ஞானத்தின் சிறந்த பகுதியாகும். பொதுவான வெளிப்பாட்டைப் பற்றிய நமது பிரதிபலிப்புகளின் அத்தாட்சி அபரிமிதமாக இல்லாவிட்டால், வேதாகமத்தைப் புரிந்துகொண்டு அதை போதிக்க வேண்டும். கிறிஸ்துவும் அவருடைய அப்போஸ்தலர்களும் வாழ்க்கையைப் புரிந்துகொள்வதற்கான நமது வழிகாட்டியாக வேதாகமத்தை அங்கீகரித்தனர். எனவே, வெளிப்படையான முரண்பாடுகள் எழும்போது அவற்றை ஏற்றுக்கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

> பொதுவான மற்றும் விசேஷித்த வெளிப்பாட்டிற்கு இடையில் ஒரு வெளிப்படையான முரண்பாட்டைக் காணும் போதெல்லாம் மூன்று சாத்தியமான தீர்வுகளைப் பற்றி சிந்திக்க உதவியாக இருப்பதை நான் கண்டேன். முதலாவது, நாம் பொதுவான வெளிப்பாட்டைப் போதுமான அளவு புரிந்து கொள்ளவில்லை. அறிவியல் அல்லது வரலாறு அல்லது தொல்லியல் அல்லது பல்வேறு விஷயங்களைப் பற்றி நாம் செல்லும்போது இது மிகவும் பொதுவானது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

